

# திருவருகை, கிறிஸ்து பிறப்புக் கால
# சிந்தனைக் கையேடு
*2024-25 (மூன்றாம் ஆண்டு)*

புதிய நற்செய்தி அறிவித்தலுக்கான அலுவலகம்

செப்டம்பர் 2013ம் ஆண்டு தொடங்கப்பட்ட
புதிய நற்செய்தி அறிவித்தலுக்கான அலுவலகம்
(ONE) சிங்கப்பூரின் உரோமைக் கத்தோலிக்க
உயர்மறைமாவட்டத்தில் உள்ள ஒரு அமைப்பாகும்.
இது ஒரு துடிப்பான, நற்செய்தி அறிவித்து, மறை
பரப்பும் திருஅவையாக நாமிருக்க வேண்டும் என்ற
நமது பேராயரின் தொலைநோக்கை நனவாக்குகிறது.

புதிய நற்செய்தி அறிவிப்பின் ஒரு ஊக்கியாக,
திருமுழுக்குப் பெற்றக் கத்தோலிக்கர்களை
மறைபரப்பும் சீடர்களாக மாற்றுவதற்கான
செயல்முறைகளையும் முன்முயற்சிகளையும்
எளிதாக்குவதே இதன் பணி.

*இந்த முயற்சிக்குக் கத்தோலிக்க அறக்கட்டளை அமைப்பின்
GIFT திட்டம் ஆதரவளிக்கிறது*

# பொருளடக்கம்


பக்கம் 5 திருவருகை, கிறிஸ்து பிறப்புக் காலச் செய்தி

6 இந்தக் கையேட்டின் நோக்கம்

6 இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

7 குழு அமர்வின் வடிவம்

8 குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

11 திருவருகைக்கால ஞாயிறுகள் (ஆண்டு 3)

12 திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

16 திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

20 திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

24 திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு

29 கிறிஸ்து பிறப்புக்கால பெருவிழாக்கள் (ஆண்டு 3)

30 கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

34 இறைவனின் அன்னை கன்னி மரியா பெருவிழா

38 ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

42 பிற்சேர்க்கை – நடவடிக்கைகள்

51 நன்றியறிவிப்புகள்

# வாக்கு மனிதர் ஆனார், நம்மிடையே குடிகொண்டார்.

**யோவான் 1 : 14**

# திருவருகை, கிறிஸ்து பிறப்புக் காலச் செய்தி

இன்று நாம் மீண்டும் ஒரு சவால் மிக்க நேரத்தில் இருக்கிறோம். நம்மைச் சுற்றி அதிகமான கவனச்சிதறல்கள் இருப்பதால் திருவருகைக்காலம் சவாலானது; கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு ஆடைகள், டிசம்பர் 25க்கு முன்பே பணி இடங்களில் கொண்டாட்டம், விருந்துக்கான மளிகை பொருள்கள் போன்றவற்றை நாம் முன்னதாக ஏற்பாடு செய்தல், என நமக்குப் பல கவனச் சிதறல்கள். மூவொரு இறைவனின் அன்பே கிறிஸ்து பிறப்பு விழாவுக்குக் காரணம். நமது மீட்புக்கான அவர்களின் திட்டத்தில் அவர்கள் ஒன்றாக இருந்தனர். தந்தையின் அன்பு இவ்வுலகில் மனுவுருவான இயேசுவின் பிரசன்னத்தில் வெளிப்படுத்தப்பட்டு, தூய ஆவியாரின் ஆற்றலால் அது இன்றும் நம்மிடையே செயலாற்றுகிறது.

கொண்டாட்டத்திற்கானக் காரணத்தை மனதில் வைத்திருப்பது நமக்கு சவாலாக உள்ளது. இது மூவொரு இறைவனின் அன்பு. நம் தந்தை, இயேசு, தூய ஆவியார் நம்முடன் மிகவும் நெருக்கமாக தொடர்பு கொள்ள விரும்பியதால், நாம் பெற்ற அன்பை நம்மால் முடிந்த வரை ஈடுசெய்ய நம்மை அது கட்டாயப்படுத்த வேண்டும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு தயாராக இருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அந்த அன்பை நம்மால் ஈடுசெய்ய முடியும். இந்த அன்பின் மறைபொருளை சிந்திக்க நாம் நேரத்தை செலவழித்தால் மட்டுமே இந்த அன்பின் ஆழம் நமக்குப் புரியும்.

நமக்குப் பிரியமானவர்களுடன் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதிலும் நமக்கு சவால் உள்ளது. மகிழ்ச்சியில் நிறைந்துள்ள நாம், மற்றவர்களும் இறைவனின் மகிழ்ச்சியைப் பெற்றிட, நம் ஆண்டவரின் பிறப்பு பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும். நாம் அதிகம் பெற்றிருந்தால், அதிகமாகப் பகிர வேண்டும்.

இறுதியாக, இந்த நிச்சயமற்றக் காலங்களில் கிறிஸ்து பிறப்பு விழாவுக்குத் தயாராவதும் சவாலானது. பருவ நிலை மாற்றத்தாலும், நடந்து வரும் போர்களாலும் ஏற்படும் பேரழிவுகள், அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, கோவிட்-19ன் பின்விளைவுகள், பலவீனமான சாதாரண வாழ்க்கை முறைக்கு ஏற்படும் பல இடையூறுகள் போன்றவற்றை நாம் சமாளிக்க வேண்டி உள்ளது. இருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்து பிறப்பு விழாவை எதிர்நோக்கும் போது, நம் தந்தையாகிய இறைவன் நம்மை அன்பு செய்கிறார், அவர் நம்மைக் கவனித்துக் கொள்கிறார் என்பதை நினைவு கூர்ந்து, அதே நம்பிக்கையால் நாம் நிரப்பப்பட வேண்டும்.

நீங்கள் அனைவரும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்குத் தயாராகி, ஒரு அர்த்தமுள்ள தருணத்தைப் பெற்றிட எனது வாழ்த்துக்களும் இறை ஆசீரும்.

**அருள் திரு. டெரென்ஸ் பெரெய்ரா**
புதிய நற்செய்தி அறிவித்தலுக்கான முதன்மை குரு

# இந்தக் கையேட்டின் நோக்கம்

இந்தக் கையேடு பெரியோர் மறைகல்விக் குழுக்களுக்காகவும், ஆலயப்பணிக் குழுக்களுக்காகவும், அன்பியச் சமூகங்களுக்காகவும் குடும்பங்களுக்காகவும், உத்தேசிக்கப்பட்டது. இதைத் தனி மனிதச் சிந்தனைகளுக்கும் பயன்படுத்தலாம்.

- நாம் வாழும் கிறிஸ்தவ சமூகத்தை, இறைவனுடைய வார்த்தையைக் கேட்டு அதை நம் வாழ்வில் கடைப்பிடிக்க ஊக்குவிக்கும் இடமாக மாற்றவும்,
- இதில் பங்கேற்போர், அண்டை வீட்டாருக்கும் தேவை உள்ளோருக்கும் உதவும் தங்களின் குறிக்கோளை அடையவும், சமூக அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும்,
- ஆலயப்பணிக் குழுக்களும், அமைப்புகளும், மற்றவர்களும் கிறிஸ்துவை மட்டுமே மையமாகக் கொண்டு, ஒன்று கூடி செபிக்கவும்,
- இதில் உள்ளச் சிந்தனைகள், செய்திகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் வழியாக நாம் ஒருவரோடு ஒருவர் நமது நம்பிக்கையைப் பகிர்ந்து, ஒப்புரவாக்கப்பட்டு, அன்பை மட்டுமே தகவல் பரிமாற்றத்தின் முக்கியச் செய்தியாக்கிக் குடும்பத்தினரிடையே உள்ளத் தொடர்பை அதிகரிக்கவும் இந்தக் கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

# இந்தக் கையேட்டைப் பயன்படுத்தும் முறை

- திருப்பலியில் இறை வார்த்தையைப் பெறுவதற்கான முன் தயாரிப்பாக ஞாயிறு திருப்பலிக்கு முன்னரோ, அல்லது திருப்பலியில் நாம் கேட்ட இறை வார்த்தைகளை நம் வாழ்க்கையில் பின்பற்றும் வகையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின்னரோ இதைப் பயன்படுத்தலாம்.
- குழு அமர்வின் போது இறை வார்த்தையைப் வாசிக்கவும், அமர்வை வழி நடத்தவும், கையாளவும் அமர்வின் உறுப்பினர்கள் முன்வரலாம்.
- ஒவ்வொரு அமர்வையும் சிறப்புடன் வழிநடத்த வெவ்வேறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்கலாம். வேறொருவர் அமர்வில் நடைபெறும் செயல்களைக் குறிப்பெடுத்து, வர இயலாதவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.
- ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளவும். அடுத்த அமர்விற்கான இடமும் நேரமும் இந்த அமர்வில் அறிவிக்கப்பட வேண்டும்.

# குழு அமர்வின் வழவம்

*தொடக்கச் செபம்*

எல்லோரும் ஒன்று சேர்ந்து தொடக்கச் செபத்தைச் சொல்லி, தொடக்கப் பாடலைப் பாடலாம். தியான உணர்வையும், இறை வார்த்தைக்குச் செவிமடுக்கத் தூண்டும் பாடலைப் பயன்படுத்தவும்.

*இறைவார்த்தை*

கொடுக்கப்பட்டுள்ள மூன்று இறை வார்த்தைப் பகுதிகளை இரு முறையாவது வாசித்து, சில மணித்துளிகள் மௌனமாக தியானிக்கவும். பின்னர், இந்தக் கையேட்டில் உள்ளவற்றைப் பயன்படுத்தி அமர்வின் முதல்வர் அப்பகுதிகளுக்கு விளக்கம் தர வேண்டும். அமர்வின் முதல்வர் முன்னதாகவே தகுந்த தயாரிப்புடன் இருத்தல் அவசியம்.

*சிந்தனைகள்*

இந்த வார இறைவார்த்தைப் பகுதிகளைச் சரியாகப் புரிந்து கொள்ள, நமது சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் வாசித்தப் பின்னர் சிறிது நேரம் தியானிக்க நேரம் ஒதுக்கவும்.

*பகிர்வுக்கானக் கேள்விகள்*

வெவ்வேறு குழுக்களை நினைவில் கொண்டு இந்தப் பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு உகந்தப் பகுதியை எடுத்து வாசித்து, சிந்தித்துக் கருத்தளிக்கவும். பலரும் கருத்தளிக்க நேரம் ஒதுக்கவும். ஒரே நபர் பேசுவதைத் தவிர்க்கவும்.

*நம் வாழ்வில் செயலாற்ற*

நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்கள் செயல்.

*நிறைவு செபம்*

எல்லோரும் இணைந்து, நிறைவு செபத்தைச் சொல்லி இவ்வமர்வை நிறைவு செய்யவும். நம் சமூகத்துக்காகவும், பங்கேற்போருக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் சிறப்பாகச் செபிக்கவும்.

*பிற்சேர்க்கை: நடவடிக்கைகள்*

நம் ஆன்மீகப் பயணத்தை நம் கிறிஸ்துவ சகோதரர் சகோதரிகளுடன் மேம்படுத்தச் செயல்பாடுகளும், நடவடிக்கைகளும் பிற்சேர்க்கைப் பகுதியில் உள்ளது.

# குழுச் சிந்தனைகளை மேம்படுத்துதல்

*‘இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடி இருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்’ மத்தேயு 18:20*

கிறிஸ்துவின் பிரசன்னத்தைக் குறித்து கவனமாய் இருங்கள். குழுவினரிடையே பேசும் போதும், செயல்படும் போதும் பணிவுடனும் மரியாதையுடனும் இருங்கள். உரையைத் தியானத்துடன் வாசியுங்கள். நற்செய்தி வாசங்களுக்கு உங்களது சிறந்த கவனத்தைக் கொடுங்கள்.

*‘எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாயிருப்பார்களாக! யோவான் 17:21*

அனைவரையும் உபசரியுங்கள். புதிய வருகையாளர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துங்கள். ஒவ்வொருவரையும் சமூகத்தின் அன்பிற்குரிய அங்கங்களாக நடத்துங்கள். அமர்வில் அனைவரும் பங்கேற்கும்படி ஊக்குவியுங்கள். அனைவருக்கும் புரியும்படியான சொற்களைப் பயன்படுத்துங்கள்.

*‘அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால், உங்களிடையே அப்படி இருத்தலாகாது.’ மாற்கு 10:42-43*

எப்போதும் யாரிடமும் அதிகாரத் தோரணையுடனும், அகந்தையுடனும், பிறருக்கு அறிவுரை கூறும் வகையிலும், யாவற்றையும் அறிந்த மாதிரி அல்லது என்ன செய்ய வேண்டும் என்று பிறருக்கு அறிவுறுத்தும் வகையிலும் நடந்து கொள்ளக்கூடாது.

*‘என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.’ லூக்கா 9:23*

இந்தச் சிந்தனைகளுக்கு மிகவும் அடிப்படையானது இறை வார்த்தை, திருச்சபையின் போதனைகள் மற்றும் கிறிஸ்துவின்பால் நம்மை மனமாறச் செய்யும் அழைப்பு. இந்த அமர்வில், உங்கள் பகிர்வு வேறு கருத்து நோக்கித் திசைமாறிச் சென்றால், அன்றைய கருத்துக்கு ஆதரவு தரும்படி அனைவரையும் அழைக்கவும்.

*‘ஏனெனில், நீங்கள் பேச வேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்.’ லூக்கா 12:12*

பகிர்ந்து கூற வேண்டியதை முன் கூட்டியே தயாரிக்கவோ, இதற்காக ஒருவரை நியமிக்கவோ தேவையில்லை. இறைவனின் ஆவி இயல்பான கருணை மிகுந்த குணத்துடன் செயல்படுவதற்காகக் காத்திருக்கவும். இக்கருத்து தொடர்பாக யாராவது தன்னிச்சையாகத் தங்களுடைய விசுவாச அனுபவத்தைப் பகிர வந்தால், அவருக்கு வாய்ப்பளித்து நன்றி கூறுங்கள்.

*‘உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்.’ மத்தேயு 5:16*

இந்தச் சிந்தனைகள் இறைவனின் திருவுளத்தைச் செய்ய நமக்கு சவால் விடுத்து, நாம் சந்திக்கும் நபர்களிடம் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்த உதவுகின்றன. அடுத்த அமர்வின் தொடக்கத்தில், கடந்த வாரம் ஒவ்வொருவரும் இதை எப்படிச் செய்தார்கள் என்பதைப் பற்றியக் கருத்தைப் பகிருங்கள்.

## சிங்கை கத்தோலிக்க வானொலி

2024 திருவருகை, 2025 கிறிஸ்து பிறப்புக் காலச்
சிந்தனைகளை ஒலி வடிவில் உங்களுக்குக் கொண்டு வருகிறது.

28 நவம்பர் 2024 முதல் எங்கள் படைப்பாளர்கள்
வழியாக ஆங்கிலத்தில் இதைக் கேட்டுப் பயனடையுங்கள்.

**நேரடி ஒலிபரப்பு:** வியாழன் காலை 8 மணி, இரவு 9 மணி
மறு ஒலிபரப்பு: வெள்ளி முதல் திங்கள்,
காலை 8 மணி, 11:45 மணி, மாலை 3:45, இரவு 9 மணி

எங்கள் இணையதளம் (https://radio.catholic.sg/) வழியாக
மட்டுமின்றி, கீழுள்ள QR குறியீடு வழியாகக் கத்தோலிக்க
வானொலிச் செயலியைப் பதிவிறக்கம் செய்தும்
நீங்கள் எந்நேரமும் இதைக் கேட்டு மகிழுங்கள். நன்றி.

# காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்.

எசாயா 9 : 2



# திருவருகைக்கால ஞாயிறுகள் (3ம் ஆண்டு)

| வாரங்கள் | வாசகங்கள் |
|---|---|
| திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு | எரேமியா 33:14-16<br>1 தெசலோனிக்கர் 3:12-4:2<br>லூக்கா 21:25-28, 34-36 |
| திருவருகைக்காலத்தின் 2ம் ஞாயிறு | பாரூக்கு 5:1-9<br>பிலிப்பியர் 1:4-6, 8-11<br>லூக்கா 3:1-6 |
| திருவருகைக்காலத்தின் 3ம் ஞாயிறு | செப்பனியா 3:14-18<br>பிலிப்பியர் 4:4-7<br>லூக்கா 3:10-18 |
| திருவருகைக்காலத்தின் 4ம் ஞாயிறு | மீக்கா 5:1-4<br>எபிரேயர் 10:5-10<br>லூக்கா 1:39-45 |



# திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத் தந்தையே, நாங்கள் புதிய வழிபாட்டு ஆண்டைத் தொடங்கும் இந்த வேளையில், உமக்குகந்த வாழ்க்கை முறைகளை மதிப்பதற்கு எங்களுக்குப் புதியப் பார்வையைத் தந்தருள்வீர் என்பதை நாங்கள் அறிவோம். உமது வார்த்தையாலும், எங்களது பகிர்வாலும் எங்கள் இதயங்கள் வலுப்பெறுவதால், உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக நாங்கள் பொறுமையாகக் காத்திருக்கும் போது எங்கள் உறவுகளை மேம்படுத்துவதற்கான படைப்பாற்றலையும் துணிவையும் உங்களுக்குத் தந்து அருள் புரியும். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்துப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்:
### எரேமியா 33:14-16

பாபிலோனில் மனமுடைந்து இருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கு எரேமியா நம் தந்தையாகிய இறைவனின் இறை வாக்கை எடுத்துரைக்கிறார். அவர்களின் துரோகத்தினால் தந்தை அவர்களை எதிரிகளிடம் ஒப்படைத்தார். அவர்களின் ஆலயம் அழிக்கப்பட்டது, அவர்களின் அன்புக்குரிய நாடு துண்டாக்கப்பட்டது,

அதன் மக்கள் நாடுகடத்தப்பட்டனர். சிதைந்து போன எருசலேம் நகரத்தையும் தாவீதின் அரசாட்சியையும் நம் தந்தை மீட்டெடுப்பார் என்பது ஒரு நிகழாத வாக்குறுதியாகத் தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் மிகக் கசப்பான தோல்வியை சந்தித்தப் பின்னரே இதை உணர்ந்திருக்க வேண்டும். ஆனாலும், இஸ்ரயேலின் கற்பனைக்கு அப்பாற்பட்டு, ஐநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே இயேசு வழியாக நம் தந்தையாகிய இறைவன் இதை நிறைவேற்றுவார்.

## இரண்டாம் வாசகம்:
## 1 தெசலோனிக்கர் 3:12 - 4-2

இதன் முதல் பகுதியில் புனித பவுல் தெசலோனிக்கேயர்களுக்காக செபிக்கிறார். இறுதி நாளில் ஆண்டவர் மீண்டும் வரும் வரை அவர்கள் கிறிஸ்தவ அன்பின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார். போதிப்பவர்கள் பொதுவாகத் தங்கள் மீது கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்ப்பார்கள், ஆனால் புனித பவுல் அதற்கு நேர்மாறாகச் செய்கிறார். இந்த வாசகத்தின் இரண்டாம் பகுதியில், புனித பவுல் தம்மிடம் இருந்து பெற்றதைச் சார்ந்து இருக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்துகிறார். கடவுளுக்குகந்த வழிகளில் வாழ்வதன் வழியாக அவர்களின் இதயங்களை வலுப்படுத்த அவர் சவால் விடுகிறார். புனித பவுல், அவர்களின் ஆசிரியராக தனது சொந்த தகுதியால் அல்ல, மாறாக கிறிஸ்துவின் போதனையின் அருளால் தெசலோனிக்கக் கிறிஸ்தவர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தார்.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 21:25-28, 34-36

தாவீதின் அரசக் குடும்பத்தைச் சேர்ந்த இயேசு, ஒரு புதிய உடன்படிக்கையின் கீழ் ஒரு புதிய இஸ்ரயேலைக் கூட்டினார். இது முதல் வாசகத்தில் குறிப்பிடப்பட்ட இறைவாக்கை நிறைவேற்றியது. இன்றைய நற்செய்தி, இறுதி நாளில் மனுமகன் மீண்டும் வருவதை உறுதியளிக்கும் ஒரு புதிய வாக்குறுதியை வெளியிடுகிறது. விழிப்புடனும் துணிவுடனும் இருக்கும் சீடர்கள் இறுதிக் காலத்தின் கொந்தளிப்புகளுக்கு மத்தியில் பயப்படாமல் நிற்கிறார்கள். உலக மாயைகளால் கவனம் சிதறினால் முடிவு பேரழிவாகத் தோன்றும். கிறிஸ்து இறுதித் தீர்ப்பிட வரும் போது எஞ்சியிருப்பவர்கள் முடிவை விடுதலையாக அங்கீகரிப்பார்கள். ஆயிரம் வருடங்கள் எடுத்தாலும், நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதிகள் பின்பற்றப்படுகின்றன.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

நம் தந்தை நம் வரலாற்றில் ஈடுபட்டுள்ளார். இஸ்ரயேல் கடினமான காலங்களில் விழுந்த போது, அவர்கள் நம் தந்தையைக் காப்பாற்றும்படி அழைத்தார்கள். நம் தந்தையாகிய இறைவன், இறைவாக்கினர்கள் வழியாக இஸ்ரயேலுக்கு ஒரு மீட்பரை வாக்களித்தார். இந்த மீட்பர் அவர் நினைத்த எல்லாவற்றையும் நிறைவேற்றுவார். இயேசு தம் பணியைத் தொடங்கிய போது, மெசியாவை உலகப் பார்வையில் பார்த்த மக்கள்

ஈர்க்கப்படவில்லை, ஆனால் நம் தந்தையின் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவராக இயேசுவை அங்கீகரித்தவர்கள் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தைக் கண்டார்கள். இறை திட்டத்தின் அடுத்த கட்டமாக அவர்கள் அதைப் பார்த்தார்கள். இறை சமூகமும் நம்பிக்கையில் நிலைத்திருந்து, '**அந்த நாள்**' என்று அடையாளப்படுத்தப்படும் இறுதித் தீர்ப்பில் கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்காகக் காத்திருந்தார்கள்.

நாம் அனைவரும் '**அந்த நாளை**' பெரும் எழுச்சி, வலி, துன்பம், திருவெளிப்பாட்டுடன் தொடர்புடைய பயங்கரமான காட்சிகளின் தருணமாக மனதில் கொண்டுள்ளோம். உலகம் ஒரு அழகான முடிவுக்கு வருமென ஒருபோதும் கற்பனை செய்யப்படவில்லை. '**அந்த நாளில்**' எல்லாம் மறைந்துவிடும் என்பதை மக்கள் உணரும் போது ஒரு பதட்டம் ஏற்படுகிறது. அவர்களின் சாதனைகளும் உடைமைகளும் அழியும். ஆயினும் இந்த வார நற்செய்தியில், இயேசு தம் சீடர்களுக்கு உறுதியளிக்கிறார்: கலக்கமுற வேண்டாம். '**அந்த நாள்**' எப்போது வரும், அது எப்படி வரும் என்று நாம் கேள்வி கேட்கக்கூடாது. அது ஏன் என்பது மட்டுமே நமது சிந்தனையாக இருக்க வேண்டும், வரலாறு நித்தியத்திற்குள் கடந்து செல்லும்.

நாம் கடவுளின் நேரத்தை செலவிடுகிறோம். படைப்பிற்கான நம் தந்தையின் மறை பொருளில் தான் நம் வாழ்வு வெளிப்படுகிறது. நாம் நமது இறுதி வீட்டை அவருடன் இணைந்தே சென்றடைய வேண்டும். இருப்பினும், பாவத்தின் காரணமாக நாம் வழி தவறிச் செல்கிறோம், கடவுளே நம்மை மீட்க வேண்டும். வாழ்வின் சோதனைகளும் '**அந்த நாளின்**' வலிகளும் நம்மை அழிப்பதற்கல்ல, அவை நம்மைத் தூய்மைப்படுத்த வேண்டும். கிறிஸ்துவின் அன்பின் வழியில் தொடர்ந்து வாழும் கிறிஸ்தவர்கள் பயப்படத் தேவையில்லை, நாம் முடிவுக்குள்ளாக மாட்டோம்; நாம் நிறைவுள்ளவர்களாவோம். இதுவே நாம் இந்தத் திருவருகைக்காலத்தில் கொண்டாடும் பெரிய எதிர்நோக்கு. இது தான் உண்மையிலேயே பகிரப்பட வேண்டிய நற்செய்தி!

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. 'அந்த நாளுக்கு' தயார் செய்ய என் இதயத்தை நான் எவ்வாறு வலுப்படுத்துவது?
2. 'அந்த நாளில்' எனது சமூகத்திற்கும் எனது அன்பானவர்களுக்கும் என்ன நடக்கும் என்று நான் எதிர்நோக்குகிறேன்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:

1. நம்மைச் சுற்றியுள்ளோரிடம் நாம் காணும் அச்சங்களும் கவலைகளும் என்ன?
2. கிறிஸ்துவின் எதிர்நோக்கின் நற்செய்தி வழியாக நாம் எவ்வாறு இதயங்களை வலுப்படுத்தலாம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

நமது ஆலயப் பணிக்குழுவின் பணிகள் நம்மை எவ்வாறு ‘அந்த நாளுக்குத்’ தயார் செய்கிறது?

### குடும்பங்கள்:

நம் குடும்பம் எவ்வாறு ஒருவரையொருவர் அன்பில் நிறைவாக்கி, ‘அந்த நாளை’ ஒன்றாக எதிர்கொள்ளத் தயாராக உள்ளது?

### நம் வாழ்வில் செயலாற்ற:

*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

இவ்வுலகிற்கு மகிழ்ச்சி, அமைதி, இலாபத்தைக் கொண்டுவரும் ஒரு உலகளாவியக் கொண்டாட்டமாகக் கிறிஸ்து பிறப்பு விழா கருதப்படுகிறது. இது குதூகலமான நேரம். கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஒரு ஆழமானப் பொருள் உண்டு எனக் கிறிஸ்தவர்களாகிய நாம் அறிவோம்: அது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை. உங்கள் குழுவுடன் கூடி, அதன் ஆழமானப் பொருளை எவ்வாறு ஒன்றாகக் கொண்டாடலாம் எனக் கலந்தாலோசியுங்கள்.

### நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே, நீர் எங்களை முழுமையாக அன்பு செய்ய அழைத்தீர். உமது மகனின் போதனைகளும், அவருடைய மிகுந்த அன்பில் எங்களுக்காகத் தம்மையே அர்ப்பணித்த முன்மாதிரியும் நாங்களும் அதையே செய்வதற்கு எங்களை வலுப்படுத்துகிறது. உமது அன்பே எங்களை நகர்த்தி, எங்களை ஆதரித்து, எங்களுக்கு எதிர்நோக்கை அளிக்கிறது. இவ்வுலகை இறுதித் தீர்ப்பிட இயேசு கிறிஸ்து மீண்டும் வரும் போது, நாம் தெளிந்த மனசாட்சியுடன் ‘ஆண்டவரே, நான் உமக்குரியவன், நான் தயார்’ என உறுதியோடு அறிக்கையிட அருள் புரியும். ஆமென்.



# திருவருகைக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

ஆண்டவரே, உமது அன்பினால் எங்கள் வாழ்வில் நன்மைத்தனம் நிறைந்துள்ளது. இந்த நன்மைத்தனம் உமது திருவுளப்படி எங்களை மாற்றிக் கொள்ள உதவுகிறது. உம்மோடு நெருங்கி வளரவிடாமல் தடுக்கும் தடைகளை எங்களால் எதிர்கொள்ள முடியும். இருப்பினும், நீர் அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வருவீர் என்ற உமது வார்த்தையை நாங்கள் நம்பி, இந்தத் திருவருகைக்காலப் பயணத்தை நம்பிக்கையுடன் மேற்கொள்ள அருள் புரியும். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்துப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்:
### பாரூக்கு 5:1-9

பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட யூத மக்களுக்கு இந்த பகுதியைப் ஆசிரியர் எழுதுகிறார். தாயகத்தை விட்டு விலகி வாழும் அவர்கள், தங்கள் உறவினர்களை பிரிந்து பரிதாப நிலையில் வாழ்ந்தனர். அவர்களின் இந்நிலை நம் தந்தையின் நோக்கம் அல்ல என்பதை ஆசிரியர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் அவர்கள் சமூகம் இருளுக்கு மத்தியில் இறைவனின் உடனிருப்பில்

கவனம் செலுத்தினால், அவர் தடைகளை அகற்றி, அவர்கள் தங்கள் தாயகம் திரும்பவும், மகிழ்ச்சியுடன் தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் ஒன்றிணையவும் அனுமதிப்பார். இவை அவருடைய விடுதலைக்கான அடையாளங்களாக இருக்கும்.

## இரண்டாம் வாசகம்:
## பிலிப்பியர் 1:4-6, 8-11

இப்பகுதியில் புனித பவுல் பிலிப்பியர்களிடம் மிகுந்த அன்புடனும் பாசத்துடனும் உரை ஆற்றுவதைக் காண்கிறோம். அவர்கள் மனம் மாறியப் பின் நற்செய்தி அறிவிப்பதில் ஈடுபட்டதைக் குறித்து நன்றியுடன் பாராட்டினார். அதே வேளையில், நம் தந்தையாகிய இறைவனின் முன்முயற்சியிலும், அவரது தொடர் உதவியிலும் மட்டுமே அவர்களின் திறன் உள்ளது என்பதை அவர் தெளிவுபடுத்துகிறார். அவர்களது சமூகப் பிணைப்பை வலுப்படுத்தவும், நம்பிக்கையை ஆழப்படுத்தவும், பகுத்தறிவைக் கூர்மைப்படுத்தவும் புனித பவுல் அவர்களை ஊக்குவிக்கிறார். இந்த வழியில், நம் தந்தையாகிய இறைவன் அவர்களுக்கு உத்தேசித்துள்ளத் திறனை அடைவதில் உறுதியாக இருக்க முடியும்.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 3:1-6

புனித லூக்கா, திபேரியு சீசர், பொந்தியு பிலாத்து போன்ற பல்வேறு அரசியல், மதத் தலைவர்களின் பெயர்களைக் கூறி, மதச்சார்பற்ற நிலப்பரப்புக்கு எதிராக திருமுழுக்கு யோவான் விடுத்த அழைப்பை நிலைநிறுத்துகிறார். வரலாற்று அடிப்படையான இவை, யோவானின் பணி ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் நடந்த ஒரு உண்மை நிகழ்வு என்பதை வலியுறுத்தி, நற்செய்தியின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது. இப்புள்ளி விபரங்கள், உலக சக்திகளோடும் கிறிஸ்துவுக்கு வழியை தயார் செய்யும் யோவானின் தெய்வீக அழைப்போடும் முரண்படுகிறது.

லூக்கா, எசாயா 40:3-5ஐ மேற்கோள்காட்டி, யோவானைப் பழைய ஏற்பாட்டு இறை வாக்குகளுடன் இணைத்து, மெசியாவுக்கான வழியைத் தயாரிப்பதில் அவரது பங்கை எடுத்துக் காட்டுகிறார். இந்த இறைவாக்குகள், மனந்திரும்புதலையும் மீட்பையும் வலியுறுத்தி, 'மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்' என்று கிறிஸ்துவின் பணியின் உலகளாவிய தன்மையை சுட்டிக்காட்டுகிறது.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

வாகனத்தின் குருட்டுப் பகுதி என்பது கண்ணாடியில் பார்க்கும் போது ஓட்டுநரால் காண முடியாத மறைவுப் பகுதிகளைக் குறிக்கிறது. நமக்கும் குருட்டுப் பகுதிகள் பல உள்ளன, இவை அறியாமையாலும் புறக்கணிப்பாலும் ஏற்படுபவை. இந்தக் குருட்டுப் பகுதிகள் பலருக்கு இயேசுவை அவரது பிறப்பில் அடையாளம் காட்டவில்லை. நற்செய்தி வாசகம் இதைத் தான் காட்டுகிறது: மனந்திரும்புதலுக்கான யோவானின் அழைப்பை மதத் தலைவர்கள் நிராகரித்தனர். யோவானின் பணியில் நம் தந்தையாகிய இறைவன்

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அவர்களுடைய பெருமை அவர்களைக் குருடாக்கியது. பெருமை நம் தவறுகளுக்கு நம்மைக் குருடாக்கி, நம் தந்தையாகிய இறைவனின் அருளை ஏற்றுக்கொள்ளாதவர்களாக நம்மை மாற்றி, நாம் தன்னிறைவு பெற்றவர்கள், மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று நம்மையே நம்ப வைக்கிறது.

புறக்கணிப்பு என்பது நம் அறிவின்மையாலும், நம் தந்தையின் திருவுளத்தைப் பற்றிய சரியானப் புரிதலின்மையாலும் உருவாகிறது. முதல் வாசகத்தில் நாடுகடத்தப்பட்ட யூதர்கள் தங்கள் துன்பத்தின் போது நம் தந்தையாகிய இறைவனின் உடனிருப்பையும் மீட்பையும் அங்கீகரிப்பதில் பல சிரமங்களை எதிர்கொண்டனர். இறைவாக்கினரின் செய்தி நம் தந்தையாகிய இறைவனின் வாக்குறுதியை அவர்களுக்கு நினைவூட்டி, அவருடைய செயல்களில் கவனம் செலுத்த அவர்களை வலியுறுத்தியது. இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் பிலிப்பியர்களை அவர்களது நம்பிக்கையை ஆழப்படுத்தவும், அவர்களது பிணைப்புகளை வலுப்படுத்தவும், நம் தந்தையின் திருவுளத்தை நன்கு புரிந்து கொள்ளவும் அவர்களை ஊக்குவிக்கிறார். இது இறைவனின் அன்பையும் பிறரது தேவைகளையும் அடையாளம் காணவும், ஆதரவை வளர்க்கவும், ஆன்மீக வளர்ச்சியைப் பகிரவும் உதவுகிறது.

பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, ஓட்டுநர்கள் தங்கள் இருக்கைகள், கண்ணாடிகளை சரிசெய்து, தங்கள் குருட்டுப் பகுதிகளைச் சரிபார்க்க வேண்டும் என்பதை அறிவார்கள். அதே போல, கிறிஸ்தவர்களாகிய நாம் இறைவார்த்தையை அறிந்திருக்க வேண்டும், தீமைகளை வெல்லத் தன்னலமற்றவர்களாக இருக்க வேண்டும், நம் தந்தையாகிய இறைவனைச் சார்ந்திருக்க மனத்தாழ்ச்சியில் வளர வேண்டும். செபம், தபம், நமது நம்பிக்கைச் சமூகம் வழியாக நமது குருட்டுப் பகுதிகளைக் கண்டறிந்து சரிசெய்ய முடியும். இது நம் தந்தையாகிய இறைவன் நமக்கு ஏற்பாடு செய்துள்ள வாழ்வை நோக்கி நம்மை நெருங்கச் செய்யும்.

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. நம் தந்தையாகிய இறைவன் உங்களுக்கு எவ்வாறு உங்கள் குருட்டுப் பகுதிகளை வெளிப்படுத்தினார்? இவற்றைக் கண்டறிய நீங்கள் என்ன செய்தீர்கள்?
2. இந்தக் குருட்டுப் பகுதிகளைக் கடக்க நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:

உங்கள் வாழ்வின் குருட்டுப் பகுதிகளைக் கண்டறிய உங்கள் சமூகம் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

நமது ஆலயப் பணியாற்றும் போது நம்மிடம் காணப்படும் குருட்டுப் பகுதிகள் என்ன?

### குடும்பங்கள்:

நமது குடும்பம் நம்மிடம் எவ்வாறு மனத்தாழ்ச்சியை வளர்க்கவும், குருட்டுப் பகுதிகளை அடையாளம் காணவும், தன்னலத்தைத் தவிர்க்கவும் உதவலாம்?

### நம் வாழ்வில் செயலாற்ற:

*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

இந்த வாரம், உங்கள் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்திற்கு யாரை அழைக்கலாம் என சிந்தியுங்கள். அடிக்கடி ஆலயம் செல்லாதவர், சமூக அரவணைப்பை உணர வேண்டியவர் பற்றி சிந்தியுங்கள். ஒரு வேளை அது உங்கள் அண்டை வீட்டாராகவோ, சக ஊழியராகவோ, உறவினராகவோ இருக்கலாம். அவர் உங்கள் அழைப்பை ஏற்க தங்கள் இதயத்தையும் மனதையும் திறக்க ஒரு குழுவாக இணைந்து இறைவனிடம் மன்றாடுங்கள். கிறிஸ்து பிறப்பின் அன்பிலும் மகிழ்ச்சியிலும் பங்குகொள்ள அவருக்கு உங்கள் அழைப்பை தனிப்பட்ட முறையில் நேரடியாகவோ தொலைபேசி வழியாகவோ தெரியப்படுத்துங்கள்.

### நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே, எங்கள் குருட்டுப் பகுதிகளால் பல வழிகளில் நாங்கள் உமக்குத் தகுதியற்றவர்கள் என்பதை அறிவோம். ஆனாலும், நீர் எங்களை விட்டு ஒருபோதும் விலகாமல், பொறுமையாக உம் மனத்தாழ்ச்சியால் எங்களை வனைந்து, உருமாற்றி, உமக்கு உகந்தப் பிள்ளைகளாக நாங்கள் வளரச் செய்தீர். நாங்கள் எதிர்கொள்ளும் அனைவருக்கும் உமது உருவத்தையும் சாயலையும் பிரதிபலிப்பதன் வழியாக எங்களைப் பற்றி நீர் பெருமைப்படுவீர் என எதிர்பார்க்கிறோம். உம் திருமகன் இயேசு என்னும் கொடைக்காக நன்றி செலுத்துகிறோம். ஆமென்.



# திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

விண்ணகத்திலிருக்கிற எங்கள் தந்தையே, திருவருகைக்காலத்தின் மூன்றாம் வாரம் உமது வார்த்தையைச் சிந்திக்கக் கூடியுள்ள நாங்கள் மகிழ்ச்சியோடு உமக்கு நன்றி செலுத்துகிறோம். மனுவுரு வழியாக வந்த எங்கள் மீட்பின் மறைபொருளை நாங்கள் தொடர்ந்து சிந்திக்கும் போது, மகிழ்ச்சியின் ஆவி எங்கள் எதிர்பார்ப்பை நிரப்பி, எல்லா சூழ்நிலைகளிலும் நாங்கள் உம்மைத் துதித்து நன்றி செலுத்த எப்போதும் தயாராக இருக்கிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

### முதல் வாசகம்:
### செப்பனியா 3:14-18

பழைய ஏற்பாட்டின் பன்னிரு சிறிய இறை வாக்கினர்களில் செப்பனியாவும் ஒருவர். அவருடையப் பணி யூதர்களை மனம் திருப்புவதில் கவனம் செலுத்தி, உருவ வழிபாடு, ஒழுக்கக்கேடான வாழ்வு குறித்து நம் தந்தையாகிய இறைவனின் தீர்ப்பைப் பற்றி எச்சரித்தது. ஆயினும், இந்த வாசகப் பகுதி எச்சரிப்பிலிருந்து மகிழ்ச்சியான செய்திக்கு மாறுகிறது. துரோகமும் பாவ

வழிகளும் இருந்த போதிலும், நம் தந்தையாகிய இறைவனின் அசைவுறா அன்பை மக்களுக்கு உறுதியளிக்கிறார். இது கிறிஸ்துவின் வருகையை முன்னறிவிக்கிறது. நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்கும் நித்தியமும் எதிர்நோக்கும் அவரே. எனவே மனுவுருவான கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாட ஆவலுடன் காத்திருக்கும் நம்மையும் செப்பனியாவின் செய்தி ஊக்குவிக்கிறது.

## இரண்டாம் வாசகம்:
## பிலிப்பியர் 4:4-7

புனித பவுல் சிறையில் இருந்த போது பிலிப்பியர்களுக்கு இதை எழுதினாலும், இதுவே புனித பவுலின் மிக மகிழ்ச்சியான திருமுகம் என பலர் அறிவார்கள். அவரது செய்தி மிகத் தெளிவானது: கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் நமது சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். பிலிப்பியில் உள்ள சமூகத்திற்கு அவர் அளித்த நடைமுறை அறிவுரைகள் இன்று நமக்கும் பொருந்தும். கிறிஸ்து பிறப்பு விழாவுக்குத் தயாராகும் நாம், ‘எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால், நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள். அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்’ என்பதை நினைவில் கொள்வோம்.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 3:10-18

திருமுழுக்கு யோவான் மனந்திரும்புதலின் திருமுழுக்கையும், வரவிருக்கும் மெசியா பற்றிய எதிர்நோக்கையும் போதித்தார். 'நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்ட போது, மக்கள் வலுவான நம்பிக்கையையும் உற்சாகத்தையும் உணர்ந்தனர். திருமுழுக்கு யோவான் மக்கள் தங்கள் அயலாருக்கு சமூக நீதியை வெளிப்படுத்த அறிவுறுத்துகிறார். அவர்கள் தேவைப்படுவோருடன் பகிரவும், வரி வசூலிப்பவர்கள் விதிக்கப்பட்டதை மட்டுமே வசூலிக்கவும், படைவீரர்கள் மிரட்டி பணம் பறிப்பதைத் தவிர்க்கவும், தங்கள் ஊதியத்தில் திருப்தியடையவும் அறிவுறுத்துகிறார். கிறிஸ்துவின் வருகையை மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கும்படி நற்செய்தி நம்மை ஊக்குவிக்கிறது. நம் அன்றாட வாழ்வில் நம் தந்தையின் நீதியையும் அன்பையும் நாம் வாழ்வாக்குவோம்.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

இந்தத் திருவருகைக்காலம் நமது மீட்பின் மறைபொருளைப் பற்றி சிந்திக்க நம்மை அழைக்கிறது. நம்மோடு ஒன்றித்து வாழ வந்த ஒரே கடவுளாக நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் காண்கிறோம். இம்மீட்பின் வாக்குறுதி நம்மை மகிழ்ச்சியால் ஆர்ப்பரிக்கச் செய்து (செப் 3:14), ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழச் செய்ய வேண்டும் (பிலி 4:4). அக்களிப்பின் (கௌடெட்டே) ஞாயிறு என்றும் அழைக்கப்படும் திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு நமக்கு ஒரு பொருத்தமான அழைப்பை

விடுக்கிறது. ஆம், 2000 ஆண்டுகளுக்கு முன்பு மாடடைத் தொழுவில் பிறந்த கிறிஸ்து இயேசுவின் பிறப்பை மட்டுமல்ல, அவரது இரண்டாம் வருகையை நாம் எதிர்பார்த்து கொண்டாட அழைக்கப்படுகிறோம்.

நம் தந்தையாகிய இறைவன் கடந்த ஆண்டில் நமக்கு உண்மையாக இருந்ததை நாம் நினைவு கூர அழைக்கப்படுகிறோம். ஆண்டவராகிய இறைவன் ஒரு வெற்றிகரமான மாவீரர் என்று நாம் நன்றியுணர்வோடும் பணிவோடும் ஒப்புக்கொள்கிறோம். 'அவர் உன் நடுவில் இருக்கின்றார்; அவர் மீட்பு அளிப்பவர்; அவர் நம்மைக் கைவிடமாட்டார்' (செப் 3:17) என்ற செப்பனியாவின் இறைவாக்கு, நம் தந்தையாகிய இறைவனின் நிலையான உடனிருப்பையும் பாதுகாப்பையும் நமக்கு உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்து வழியாக அனைத்து மனிதகுலத்திற்கும் கிடைக்கும் மீட்பையும் இது சுட்டிக்காட்டுகிறது.

நம் தந்தையாகிய இறைவன் உண்மையுள்ளவர் என்பதில் நாம் உறுதியாக இருப்பதால், இந்த ஞாயிறை நாம் மகிழ்ச்சியான இதயத்தோடு அணுகும் போது, நாமும் மனம் திரும்புதலுக்கான திருமுழுக்கு யோவானின் அழைப்புக்கு பதிலளித்தவர்களின் உண்மையான ஆர்வத்தைப் பிரதிபலிப்போம். இந்த நற்செய்தியைப் பெற்றுள்ள நாம், அதன் மீதான நமது நம்பிக்கையிலிருந்து மகிழ்ச்சியோடு எழுந்து, நமது செயல்களால் நற்செய்தியை அறிக்கை செய்யத் தூண்டப்பட வேண்டும். அயலாரை அன்பு செய்து, பிறரிடம் நீதியோடு நடந்து, நம்மிடம் இருப்பதில் திருப்தி காண்போம். நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை எப்போதும் மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டுவோம்.

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. கடந்த ஆண்டில் நிச்சயமற்ற, ஏமாற்றமுள்ள வேளைகளில் நம் தந்தையாகிய இறைவனின் வழிகாட்டலையும் பராமரிப்பையும் எவ்வழிகளில் கண்டீர்கள்?
2. நம் தந்தையாகிய இறைவனின் உண்மைத்தன்மையை அறிந்து கொண்டதன் மகிழ்ச்சி உங்கள் செயல்களால் எவ்வாறு நற்செய்தி அறிவிக்க ஊக்கப்படுத்தியது?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:
நமது சமூகத்தில் மோதல்களும் சவால்களும் ஏற்பட்ட போது அங்கு மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் மீட்டெடுக்க உதவும்படி இறைவனை அழைத்த வேளையை நினைவு கூருங்கள். ஒரு சமூகமாக, இந்த நற்செய்தியை மற்றவர்களுக்கு எப்படிப் பகிரலாம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:
நமது ஆலயப் பணிக்குழுவின் உள்ளும் புறமும் உள்ள உறுப்பினர்களுக்கு நற்செய்தியின் மகிழ்ச்சியை மற்றவர்களுக்குக் கொண்டு செல்லவும், தேவை உள்ளோருக்குப் பணியாற்றவும் ஆதரவளிக்கவும் நமது பணிக்குழு எவ்வழிகளைக் கையாண்டுள்ளது?

### குடும்பங்கள்:
நமது குடும்ப உறுப்பினர்களின் தியாகங்களை நாம் எவ்வாறு அறிந்து, நமது நன்றியையும் மகிழ்ச்சியையும் அவர்களுக்கு எவ்வாறு சிறப்பாக வெளிப்படுத்தலாம்?

### நம் வாழ்வில் செயலாற்ற:
*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டத்திற்கான திட்டங்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தயாரிப்புகள், அலங்காரங்கள், உணவு வகைகள், செப சிந்தனைக்கான இடம், கிறிஸ்து பிறப்பு கதையைப் பகிர்தல் போன்றவற்றை சரி பார்க்கவும். இவற்றில் அனைவரையும் ஈடுபடுத்துங்கள், இந்தக் கொண்டாட்டத்திற்கு அவர்களும் உயிர் கொடுப்பதை உணரச் செய்யுங்கள். எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் பிறப்புக் காட்சியை அமைப்பதில் உதவலாம், மற்றவர்கள் செப சிந்தனைகளைத் தயார் செய்யலாம்.

### நிறைவு செபம்:
*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே, இயேசுவையும் மனந்திரும்புதலின் வழியையும் எங்களுக்குச் சுட்டிக்காட்ட எங்கள் வாழ்வில் நீர் கொண்டு வந்த திருமுழுக்கு யோவான்களுக்காக நன்றி செலுத்துகிறோம். இந்த ஆண்டு முழுவதும் நீர் எங்களிடம் காட்டிய விசுவாசம், நீர் எப்போதும் எங்களோடு இருக்கிறீர் என்பதை உணர்ச் செய்து, உமது மீட்பை நன்றியுணர்வோடும் பணிவோடும் நிரப்புவதாக. உமது உடனிருப்பின் மகிழ்ச்சியும், உமது நிலையானப் பராமரிப்பும், எங்கள் நற்செயல்களால் நற்செய்தி அறிக்கையிட எங்களைத் தூண்டவும், அயலாரை அன்பு செய்யவும், நீதியோடு செயல்படுடவும், இருப்பதில் திருப்தி அடையவும் செய்வதாக. ஆமென்.



# திருவருகைக்காலத்தின் நான்காம் ஞாயிறு

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

**விண்ணகத் தந்தையே, திருவருகைக் காலத்தின் இறுதி வாரத்தில் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட எங்கள் தயாரிப்பைத் தீவிரப்படுத்துகிறோம். நாங்கள் உமது வார்த்தையைப் பகிர்ந்த போது நீர் எங்கள் நடுவில் இருந்து, நாங்கள் பெற விரும்பும் செய்திகளை எங்களுக்கு வெளிப்படுத்தினீர். தூய ஆவியாரின் செயலாற்றலை உணர எங்களுக்கு உதவியருளும். உமது அன்பின் மாபெரும் கொடையாகிய இயேசுவுக்காக நாங்கள் உம்மை மாட்சிப் படுத்துகிறோம். ஆமென்.**



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்:
### மீக்கா 5:1-4

மீக்கா 5:1 இந்த வாசகச் சூழ்நிலையின் பின்னணியைத் தருகிறது: நம் தந்தை யாகிய இறைவனின் மக்களை எதிரிகள் சூழ்ந்து அவர்களது தலைவரைத் தாக்கி யுள்ளனர். நம் தந்தையாகிய இறைவன் அனுப்பிய இறைவாக்கினர்களின் எச்சரிக் கைகளுக்கு செவிசாய்க்காததன் விளைவு இது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அவர்களில் பலவீனமானவர்களை வேண்டுமென்றே ஒடுக்கினர். இப்போது,

அவர்களின் எதிரிகள் மாறி மாறி அவர்களை ஒடுக்குவர். ஆயினும்கூட, அவர்கள் எல்லாவற்றையும் இழக்கவில்லை, ஏனென்றால் இஸ்ரயேலை மறுசீரமைக்க ஒரு வாக்களிக்கப்பட்டத் தலைவர் வருவார். சரியான நேரத்தில், அவர் தம் மக்களைக் காப்பாற்றி, அமைதியை ஏற்படுத்துவார்.

## இரண்டாம் வாசகம்:
## எபிரேயர் 10:5-10

எபிரேயருக்கு எழுதப்பட்டத் திருமுகத்தின் ஆசிரியர், வாக்களிக்கப்பட்ட இயேசுவின் வருகையின் திடுக்கிடும் தன்மையை நமக்கு வெளிப்படுத்துகிறார். நம் தந்தையாகிய இறைவனின் மக்கள் எதிர்பார்க்கும் மறுசீரமைப்பையும் இது வெளிப்படுத்துகிறது. கடவுள் தம் நிபந்தனைகளின்படி மட்டுமே தம் மக்களை மீட்டெடுப்பார். 'பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கி விடுகிறார்.' நம் தந்தையாகிய இறைவன் இஸ்ரயேலின் கடந்த கால மாட்சியையும் வழிபாட்டையும் மீட்டெடுக்க மாட்டார். அவர் தம் மக்களிடமிருந்து கீழ்ப்படிதலை நாடுகிறார். இது பெரும்பான்மையான இஸ்ரயேலுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் உண்மை. இருப்பினும், நம்பிக்கையின் கண்களால் நோக்கும் போது, பழைய சட்டத்தின் நடைமுறைகள் '(இயேசுவின்) உடலின் காணிக்கையில்' நிறைவையும் முழுமையையும் அடைவதைக் காணலாம். ஒவ்வொரு திருப்பலியில் இது புதுப்பிக்கப்பட்டு மீண்டும் நமக்கு வழங்கப்படுகிறது.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 1:39-45

இஸ்ரயேலர்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் மாட்சிமிக்க மெசியா, இந்த நற்செய்தி பகுதியில் முழுமையான இயல்பு நிலையில் மறைந்துள்ளார். எல்லா வெளிப்புற தோற்றங்களுக்கு, மலைநாட்டுப்புறத்தில் சாதாரணமாக அரட்டையடிக்கும் பெண்களாக இவ்விருவரும் இருந்தாலும் அவர்களின் வயிற்றில், மனிதராய்ப் பிறந்த வர்களுள் இவரைவிடப் பெரியவர் எவருமில்லை எனப்பட்ட திருமுழுக்கு யோவானும் (மத் 11:11), மனுவுருவாகிய கடவுள் இயேசுவும். இந்த இயல்பான நிலை இருந்தபோதிலும், இயேசு அடையாளம் காணப்பட்டு, திருமுழுக்கு யோவானால் அங்கீகரிக்கப்படுகிறார். எலிசபெத்தின் வயிற்றில் இருந்த போதே அவரது பணி தொடங்கிவிட்டது. இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக அவர் உலகை ஆயத்தப்படுத்துவார்.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

நமது புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளின் முன்னோக்குடனும், நமது விசுவாசக் கண்களின் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது இன்றைய வாசகங்கள் நமக்கு எதிர்பார்ப்பையும் நிறைவேற்றத்தைபையும் பற்றிப் பேசுகின்றன. இருப்பினும், பெரும்பான்மையான இஸ்ரயேலுக்கு இது 'நிறைவேறா எதிர்பார்ப்புகள்'. இயேசு கிறிஸ்துவும் அவருடைய செய்தியும் யூத மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இருக்கவில்லை. எனவே, அவர்கள் இன்று வரை மெசியாவின் வருகைக்காகக் காத்திருக்கிறார்கள்.

இந்தத் தொடர் எதிர்பார்ப்பே கிறிஸ்தவர்களாகிய நாம் கற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. ஒவ்வொரு கிறிஸ்து பிறப்பு விழாவுக்குப் பிறகும், நம் 'கிறிஸ்து பிறப்பின் எதிர்பார்ப்பு' குறைகிறதா? அப்படியானால் அது ஒரு மத அனுசரிப்பா? கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு நாம் பழகிவிட்டதால் அப்படியாகிவிட்டதா? எனவே, நமது யூத சகோதர சகோதரிகள் 'நிறைவேறா எதிர்பார்ப்புகளால்' பாதிக்கப்படும் அதே வேளையில், கிறிஸ்தவர்களாகிய நாம் 'எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதால்' பாதிக்கப்படுவதால், ஒவ்வொரு ஆண்டும் நாம் அனுபவிப்பதை விட இதில் இன்னும் அதிகமாக இருக்கிறதா என நம்மை நாமே வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்தவ வாழ்வின் சோர்வும், பழக்க வழக்கமும், இயல்பும் நம்முள் தொற்றியுள்ளது எனப் பொருள்.

அப்படியானால், இதை நாம் எவ்வாறு சமாளிப்பது? வாழும் ஆண்டவரை நாம் தொடர்ந்து எதிர்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் அவருடன் ஒரு தனிப்பட்ட உறவை வைத்திருக்க முடியும் என்பதால், நம் தந்தையாகிய இறைவனை நாம் 'தனிப்பட்டவர்' என விவரிக்கிறோம். நாம் அவரை விவிலியத்தில் எதிர்கொள்ளலாம், அருள் அடை யாளங்களில் பெறலாம், தனிப்பட்ட செபத்துடனும் இணையலாம். நாம் அவரை சந்தித்து அவருடன் ஒரு உறவை வளர்த்துக் கொள்ளும் போது, இனி நம் நம்பிக்கை சாதாரணமாக இருக்காது. நம் தந்தையாகிய இறைவன் என்றும் படைப்பாற்றல் மிக்கவர், நம்மை உற்சாகப்படுத்தவும் ஆச்சரியப்படுத்தவும் அவர் காத்திருப்பதால், நம் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டம், 'இறைவன் வந்ததால் இவ்வுலகிற்கு மகிழ்ச்சி' என்ற எதிர்பார்ப்பின் நிறைவேற்றமாகத் திகழும்.

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. இந்த ஆண்டின் கிறிஸ்து பிறப்பு விழாவில் உங்களுக்குத் 'புதியது' என்ன?
2. இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் அவரை எதிர்கொள்ள நம் தந்தையாகிய இறைவன் உங்களை எவ்வாறு அழைக்கிறார்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:

நம் தந்தையாகிய இறைவனுடனான நமது தனிப்பட்ட உறவில் ‘அதிகமாக’ இருப்பதை காண சமூக அமர்வுகளில் என்ன உறுதியான நடவடிக்கைகளைச் செயல்படுத்தலாம்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

இந்த கிறிஸ்து பிறப்பு விழாவில் நாம் பணியாற்றுவோர் இயேசுவுடன் ஒரு புதிய எதிர்கொள்ளலை மேற்கொள்ள நாம் எவ்வாறு உதவலாம்?

### குடும்பங்கள்:

இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை நாம் எவ்வாறு முந்தையதை விட வித்தியாசப்படுத் தலாம்?

### நம் வாழ்வில் செயலாற்ற:

*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

கிறிஸ்து பிறப்பு விழாவின் இறுதி நாள்களில், ஆன்மீக தயாரிப்புகளில் கவனம் செலுத்துங்கள். இவ்வாண்டு இயேசுவை இன்னும் முழுமையாக இதயத்தினுள் ஏற்க இறைவனை மன்றாடி, குடும்பமாக, சமூகமாக செபத்தில் நேரத்தை செலவிடுங்கள். அன்பு, எதிர்நோக்கு, அமைதி என்னும் கருப்பொருள்களில் நீங்கள் ஒரு திரு விழிப்பையோ, தியானதையோ, நோன்பையோ (ஒரு சந்தி) ஏற்பாடு செய்யலாம். கிறிஸ்து பிறப்பு விழாவின் உண்மையான பொருளை எதிர்கொள்ள உங்களுக்காக மட்டுமல்ல, நீங்கள் அழைத்தவர்களுக்காகவும் செபியுங்கள்.

### நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே, விவிலியத்தில், அருள் அடையாளங்களில், மற்றவர்களுடன் நாங்கள் உருவாக்கும் உறவுகளில், நாங்கள் உம்மைத் தொடர்ந்து எதிர்கொள்ள அருள் புரியும். திருமுழுக்கு யோவான் இயேசுவை மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டியது போலவே நாங்களும் செய்ய விரும்புகிறோம். இவ்வாறாக, நாங்கள் எங்கள் எல்லா செயல்களிலும் உம்மை மாட்சிப்படுத்துவோமாக. ஆமென்.



இன்று ஆண்டவராகிய
மெசியா என்னும் மீட்பர்
உங்களுக்காகத் தாவீதின்
ஊரில் பிறந்திருக்கிறார்.

 லூக்கா 2 : 11

# கிறிஸ்து பிறப்புக்காலப் பெருவிழாக்கள் (3ம் ஆண்டு)

| வாரங்கள் | வாசகங்கள் |
|---|---|
| கிறிஸ்து பிறப்புப் பெருவிழா | எசாயா 52:7-10<br>எபிரேயர் 1:1-6<br>யோவான் 1:1-18 |
| இறைவனின் அன்னை கன்னி மரியா பெருவிழா | எண்ணிக்கை 6:22-27<br>கலாத்தியர் 4:4-7<br>லூக்கா 2:16-21 |
| ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா | எசாயா 60:1-6<br>எபேசியர் 3:2-3, 5-6<br>மத்தேயு 2:1-12 |



# கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

**இயேசுவே, நீர் தந்தையின் வாக்குறுதியை நிறைவேற்ற மனுவுருவானீர். நாங்கள் உம்முடன் நிலைவாழ்வைப் பகிர்ந்து கொள்ள எல்லா படைப்புகளையும் நீர் அவரிடமே திரும்பக் கொண்டு செல்ல விரும்பினீர். நீர் அனைவருக்கும் கொண்டு வரும் வாழ்வின் கொடைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போமாக. உமது உடனிருப்புக்காக நன்றி. எல்லா மக்களும் தங்கள் வாழ்வில் உமது உடனிருப்பை அனுபவிக்க அருள் புரியும். தந்தையோடும், தூய ஆவியாரோடும் ஒரே இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்பவர் நீரே. ஆமென்.**



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்:
### எசாயா 52:7-10

திருவருகைக்காலத்தில் இருந்தது போல இறைவாக்கினர் எசாயா, இப்போதும் கிறிஸ்து பிறப்பு விழாவன்றும் இருக்கிறார். அவரது எழுத்துக்கள் மெசியாவின் வரவை முன்னறிவிப்பதோடு மட்டுமன்று, ஒடுக்குமுறையிலிருந்து மீட்பதையும், விடுதலைக்காக மக்கள் கொண்டு இருந்த எதிர்நோக்கையும் வெளிப்படுத்து கிறது. இஸ்ரயேலர்கள் நம் தந்தையாகிய

இறைவனின் மாபெரும் மீட்புச் செயல்களில் ஒன்றை அனுபவித்த காலத்திலிருந்து இந்தப் பகுதி எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பாபிலோனில் ஐம்பத்தொன்பது ஆண்டுகள் நாடுகடத்தப்பட்டு, பின்னர் வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குத் திரும்பினார்கள். ஆனாலும், எல்லா மக்களுக்குமான ஒரு ஆழமான ஆழ்ந்த மீட்புக்காக அவர்கள் ஏங்கினார்கள். 'மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்.' இன்று, இந்த தராள மீட்பை அனைவருக்கும் கொண்டு வந்த இயேசு கிறிஸ்துவின் வருகையை நாம் கொண்டாடுகிறோம்.

## இரண்டாம் வாசகம்:
## எபிரேயர் 1:1-6

எபிரேயருக்கு எழுதப்பட்ட இந்தத் திருமுகம், புதிய ஏற்பாட்டு சொற்பொழிவு நூல்களில் ஒன்றாகும். நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் விடாமுயற்சியுடன் இருக்குமாறு இது வாசகர்களை அறிவுறுத்துகிறது. கிறிஸ்துவே நம் தந்தையாகிய இறைவனின் வெளிப் பாட்டின் முழுமை என்பதே இத்திருமுகத்தின் முக்கிய செய்திகளில் ஒன்று. 'பலமுறை, பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்விறுதி நாள்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்' என்று முன்னுரையில் சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவில், நாம் இறைவனை மனித உருவில் நேரடியாகப் பேசுவதைக் காண்கிறோம்.

## நற்செய்தி வாசகம்:
## யோவான் 1:1-18

விவிலியத்தின் மிக அழகான பகுதிகளில் ஒன்றான யோவானின் இந்த முன்னுரைப் பற்றி நாம் என்னவென்று சொல்லவது? 'வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடி கொண்டார்' என்ற 14ம் வசனம் நமது மூவேளைச் செபத்திலும் பயன்படுத்தப்படுகிறது. நேரடியான கிரேக்க மொழிபெயர்ப்பில், 'அந்த வார்த்தை நம்மிடையே அவருடைய கூடாரத்தை அமைத்தது' என்று வரும். தாழ்த்தப்பட்ட நாடோடிகளுக்கு மத்தியில் கூடாரம் அமைக்க இயேசு அவரது தெய்வீக நிலையை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? **அன்பு**. நம் தந்தையாகிய இறைவன் நம்மை மிகவும் அன்பு செய்கிறார், நாம் அவரைக் காண வேண்டும், அவரை அறிய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் நம்மோடு இருக்கவே நமக்குள்ளே தம் கூடாரத்தை அமைக்கிறார்.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

நாம் ஒருவரிடம் காட்டும் அன்பின் இறுதி செயல் என்ன? ஒரு துயரச் சம்பவத்தில் அவர்களுக்குப் பக்கத்துணையாக இருப்பது, கிறிஸ்து பிறப்பு விழாவின் போது நோயால் தனித்திருப்போரிடம் பேசுவது, திருமணம் தடைபட்ட ஒருவருடன் உரையாடுவது, போன்ற அனுபவங்களை நாம் பெற்றிருக்கலாம். இவ்வேளைகளில் அவர்கள் தனது நன்றியைத் தெரிவிக்கும்போது, நம் செய்த செயல்களின் முக்கியத்துவத்தை நாம் ஒரு போதும் உணர்ந்திருக்க மாட்டோம்.

மற்றவர்களின் அனுபவத்தை நாம் அனுபவித்தாலன்றி அதை ஒரு போது உணர முடியாது. ஆனாலும், அந்த நபரின் துக்கத்தில், தனிமையில் அவருடன் இருக்க நாம் முடிவு செய்தோம். மனுவுருவைப் புரிந்து கொள்வதற்கான ஒரு வழி இது. கடவுளின் திரு மகன் மனுவுரு எடுத்து, நம்மோடிருக்க நம்மைப் போலானார். நமது துக்கத்திலும் தனிமையிலும் நம்மோடு இருக்கவே அவர் இவ்வாறு செய்தார்.

இது வரை சொல்லப்பட்டக் கதைகளில் கிறிஸ்து பிறப்புக் கதையே மிகப் பெரிய ஒன்றாகும். வேறு எங்கும் செல்ல முடியாத நிலையில், ஒரு தாழ்மையான மாடடைத் தொழுவில், தங்கள் குழந்தையை வரவேற்ற ஒரு ஏழை இளம் தம்பதியரைப் பற்றிச் சொல்லும் கதை. ஆனால், அதன் எளிமைக்கு அப்பால், இது ஒரு ஆழமான கதை, கடவுள் மனிதனாக மாறி, நம் வாழ்விலும் நம் துன்பத்திலும் பங்கு கொள்ள விரும்பியக் கதை. இறுதியில் இது, நம் தந்தையாகிய இறைவனின் ஆழமான அன்பின் கதை. புனித அல்போன்சஸ் அவர்களின் பிரபலமான கிறிஸ்து பிறப்புப் பாடல், இந்த மனுவுருவின் அளவையும், மறை பொருளையும், அழகையும் சுருக்கமாகக் கூறுகிறது: ‘ஓ விண்ணக வேந்தனே! நீர் விண்மீன்கள் வழியாக வருகிறீர். இக்குளிரிலும், உறைபனிக் குகை வழியாகவும் நீர் வருகிறீர். எங்களை அன்பு செய்ய நீர் கொடுத்த விலை இதுவோ!’

இயேசு நம்மை அன்பு செய்ய அவர் கொடுத்த விலை என்ன? நம்மில் ஒருவராக மாற அவர் தனது தெய்வீக நிலையை விட்டுக் கொடுத்தார். இதுவே கடவுளின் அன்பின் அளவுகோல்!

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. துன்ப வேளையை அனுபவித்த ஒருவருடன் நீங்கள் இருந்த நேரத்தை நினைவில் கொள்ளுங்கள். அவருடன் உங்கள் நேரத்தைப் பகிர்வது எப்படி இருந்தது?
2. மனுவுரு என்பது நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் மாபெரும் மறைபொருள். கடவுள் நம்மில் ஒருவராக மாறி, தமது உடனிருப்பைப் பகிர்ந்து கொண்டார் என்பதை நீங்கள் எவ்வாறு அறிந்துள்ளீர்கள்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:
நம்மிடையே உள்ள கிறிஸ்துவின் உடனிருப்பால் ஈர்க்கப்பட்டு, கிறிஸ்து பிறப்பு விழாவின் பொருளை நான் யாரை அழைத்துப் பகிர்வது?

### ஆலயப் பணிக்குழுக்கள்:
என் ஆலயப் பணிக்குழுவோடு நான் பணியாற்றும் போது கிறிஸ்து பிறப்பு விழாவின் அனுபவத்தை நான் எவ்வாறு பகிர்வது?

### குடும்பங்கள்:
யோசேப்பும் மரியாவும் கடினமான வேளைகளில் ஒருவரையொருவர் ஆதரித்து, இயேசுவைப் பொறுப்புடன் கவனித்துக் கொண்டனர். ஒரு குடும்பமாக, நீங்கள் ஒருவரையொருவர் ஆதரித்த தருணத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.?

### நம் வாழ்வில் செயலாற்ற:
*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

கிறிஸ்து பிறப்பு விழா காலத்தின் ஆழமான பொருளைக் கொண்டாட ஒன்று கூடுங்கள். இயேசுவின் பிறப்பு (லூக்கா 2:1-14) பற்றிய நற்செய்தி வாசித்து ஒன்று கூடலைத் தொடங்குங்கள். மனுவுரு என்பதன் மறைபொருளை சிந்தித்து, நன்றி செபத்தை சொல்லுங்கள். பின்னர், விருந்தோம்பி, உணவைப் பகிர்ந்து, ஒன்றாக உங்கள் நேரத்தை அனுபவியுங்கள். ஆனால், கிறிஸ்துவின் மீது உங்கள் கவனம் நிலைத்திருப் பதை உறுதி செய்யுங்கள். இயேசு பிறப்பின் பொருள் என்ன என்பதைத் தனிப்பட்ட முறையில் பகிர்ந்து கொள்ள ஒவ்வொரு நபரையும் ஊக்குவிக்கவும்.

### நிறைவு செபம்:
*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

அன்புத் தந்தையே, எங்கள் வாழ்வில் பங்கேற்கவும், உமது அன்பை எங்களுக்குக் காட்டவும் உம் திருமகனை எங்களுக்காக அனுப்பினீர். நாங்கள் உமக்கு எங்களது நன்றியுணர்வைக் காட்ட விரும்புவதால், துன்பப்படுவோருக்கும், தனிமையில் இருப் போருக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும், கைவிடப்பட்டவர்களுக்கும் உமது அன்பை ஏந்திச் செல்வோம். எங்கள் மீட்பு வந்துவிட்டதை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொண்டாடும் நேரமே இந்த கிறிஸ்து பிறப்பு விழா. நீர் இயேசுவை எங்களுடன் பகிர்ந்து கொண்டதை இது எங்களுக்குக் கற்று தருகிறது. எனவே, நாங்களும் உமது முன்மாதிரியைப் பின்பற்ற அருள் புரியும். ஆமென்.



# இறைவனின் அன்னை கன்னி மரியா பெருவிழா

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

இரக்கம் நிறைந்த நல்ல தந்தையே, கடந்த ஆண்டு முழுவதும் எங்கள் வாழ்வில் ஏற்பட்ட மகிழ்ச்சியான சவாலான அனைத்துக்கும் உமக்கு நன்றி. எங்கள் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் எங்களுக்கு நீர் தேவை, ஏனென்றால் நிலைவாழ்வளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் மட்டுமே உள்ளது. ஒவ்வொரு நாளும் உமக்குப் பதிலளிக்கும் எங்கள் தூய அன்னை கன்னி மரியாவின் உறுதியான உண்மையுள்ள இதயத்தின் முன்மாதிரியை நாங்களும் பின்பற்ற உதவியருளும். எங்கள் அன்னை செய்ததைப் போலவே நாங்களும் உமக்கு மாட்சியையும் புகழையும் அளிக்ககிறோம். ஆமென்.



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்துப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்: எண்ணிக்கை 6:22-27

பொதுவாக ‘குருக்களின் ஆசீர்’ என்று அழைக்கப்படும் எண்ணிக்கை நூலின் இப்பகுதி, பழங்காலம் முதல் இன்று வரை பயன்படுத்தப்படுகிறது. அன்று இஸ்ரயேல் மக்கள் சீனாய் மலையிலிருந்து வாக்கு அளிக்கப்பட்ட நாடு நோக்கிப் பயணிக்கத் தயாரானார்கள். எனவே, கடவுள் வாக்கு அளித்தபடி இஸ்ரயேலர்கள் கானானுக்கு செல்லும் பயணத்திற்கு இது ஒரு ஆசீர்.

கடவுளால் ஆரோனுக்கு கட்டளையிடப்பட்ட இந்த ஆசீர், நம் தந்தையாம் இறைவனின் உயிரிலும் வல்லமையிலும் இறைவன் பங்கெடுப்பதைக் குறிக்கிறது. இது இஸ்ரயேல் மக்களுடன் கடவுள் கொண்டுள்ள உடன்படிக்கை உறவிலிருந்து பாய்கிறது. பதிலுக்கு, இஸ்ரயேலர்கள் கடவுளின் மக்கள் என்ற தங்கள் நிலையை அங்கீகரித்து உறுதி அளிக்க அழைக்கப்படுகிறார்கள்.

## இரண்டாம் வாசகம்:
## காலத்தியர் 4:4-7

நாம் அவருடைய பிள்ளைகளாக வேண்டும் என்பது நம் தந்தையாகிய இறைவனின் விருப்பம். ஒரு பெண்ணிலிருந்து பிறந்த இயேசு கிறிஸ்து, பாவம் தவிர முழுமையான மனித நிலையை பகிர்ந்த 'காலம் நிறைவேறிய போது,' அது மோசே சட்டத்தின் கீழ் இயேசு கிறிஸ்து பிறந்ததையும் குறிக்கிறது. கடவுளின் திட்டத்தின்படி சட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வந்தவர் அவர். இயேசு கிறிஸ்துவில், தூய ஆவியாரோடு, நாம் நம் தந்தையாகிய இறைவனுடைய பிள்ளைகளாக முழுமையடைந்தோம். இதை நம்புவோர் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளாக, 'அப்பா, தந்தையே!' எனக் கூக்குரலிடலாம்.

## நற்செய்தி வாசகம்:
## லூக்கா 2:16-21

வானதூதர்கள் காட்டிய அடையாளங்களைக் காண இடைர்கள் விரைந்தனர். கந்தைத் துணியால் சுற்றப்பட்டு, ஒரு குழந்தை தொட்டியில் கிடப்பதை அவர்கள் கண்டனர். கதையில் வேறுபாடுகள் தெளிவாக உள்ளது. புகழ்பெற்ற வானதூதர்கள் மாபெரும் மீட்பர் பிறந்த செய்தியை ஏழ்மையான சூழலில் உள்ளோருக்குக் கொண்டு வந்தனர். ஆயினும், இயேசு கிறிஸ்து ஏழ்மையான சூழலில் பிறந்தார். இது சாத்தியமற்றதாகத் தோன்றினாலும், மீட்புக்கான கடவுளின் வாக்குறுதியை லூக்கா இவ்வாறு நமக்கு நினைவூட்டுகிறார். பெற்றோர் நடுவில் கிடக்கும் ஒரு ஆதரவற்ற குழந்தை இன்றைய நிலையற்ற, வீடற்ற புலம்பெயர்ந்தோரை ஒத்திருக்கிறது. அன்னை மரியாள் இவற்றைச் சிந்தித்ததில் ஆச்சரியமில்லை. நம் தந்தையாகிய இறைவனின் திட்டத்தை அவள் புரிந்து கொண்டு அவரில் அவள் நம்பிக்கை வைத்தார்.

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

நம் விருப்பத்திற்கு ஏற்ப ஆசீர் கிடைப்பதை நாம் அடிக்கடிப் பார்க்கிறோம். ஆசீர் பற்றிய கிறிஸ்தவப் பார்வை நம் தந்தையாகிய இறைவனுடனான உறவை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து படைப்புகளும் முழுமையான அன்பில் வாழ வேண்டும் என்பதே அவரது மிகப் பெரிய ஆசை. இதை நன்கு புரிந்து கொள்ள, அன்னை மரியாவைக் காணலாம். 'பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தை யும் ஆசி பெற்றதே!' (லூக் 1:42) என எலிசபெத் அன்னை மரியாவை வாழ்த்தியதை, கடவுளின் திட்டத்தில் உள்ள அவளது சிறப்புப் பங்கை அவள் ஒப்புக்கொள்கிறாள்.

ஆண்டின் முதல் நாளையே நம் திருஅவை இறைவனின் அன்னை கன்னி மரியாவின் பெருவிழாவாகக் கொண்டாடுகிறது. நம் தந்தையாகிய இறைவனால் அருள் மிகப் பெற்றவராக ஆசீர்வதிக்கப்பட்ட அவளை மதித்து, அவளை நம் மீட்பின் இன்றியமையா பகுதியாகக் குறிப்பிடுகிறோம். அன்னை மரியா திருமணத்திற்கு முன் கர்ப்பமானதற்காக மரண தண்டனையை எதிர்கொண்ட போதும், அவள் கடவுளின் ஆசீரில் முழு நம்பிக்கை கொண்டிருந்தார். பெற்றெடுக்கும் குழந்தையை முழுமையாக புரிந்து கொள்ளாமல், கீழ்ப்படிதலுடனும் நம்பிக்கையுடனும் இறைவனின் தாயாகத் தன் பாத்திரத்தை ஏற்றுக் கொண்டார். நம் விருப்பப்படி பெறுவது ஆசீர் அல்ல, கடவுளின் நிலையானத் திட்டத்தில் பங்கு பெறுவதே ஆசீர் என்று அன்னை மரியா நமக்குக் கற்பிக்கிறார்.

மேலும், ஆசீர் பெற பதில் தேவைப்படுகிறது. அன்னை மரியா 'ஆம்' என்று கூறி நம் தந்தையாகிய இறைவனின் திருவுளத்தை ஏற்றது போல நம் வாழ்வில் நாமும் அவருடைய விருப்பத்தை ஏற்க அழைக்கப்படுகிறோம். மரியா தனது நிலைமையை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை என்றாலும், கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை வைத்து, தன் இதயத்தில் அதை சிந்தித்தார். கடவுளின் திட்டத்தை நாம் புரிந்து கொள்ளாத போது, அதை ஏற்கும் அளவுக்கு அவரை நம்புகிறோமா? நாம் அதைப் பற்றி சிந்திக்கிறோமா அல்லது நம் சொந்தப் புரிதலை நம்புகிறோமா?

மரியாவைப் போல இயேசுவை உடல் ரீதியாக பிறப்பிக்க முடியாது என்றாலும், அவரது அன்பை நாம் மற்றவர்களுக்கு கொண்டு செல்ல முடியும். அன்பின் ஒவ்வொரு செயலும் நம் தந்தையாகிய இறைவனின் ஆசீரை உலகத்துடன் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கிறது. அன்னை மரியாள் எப்போதும் நம்மை இயேசுவிடம் சுட்டிக்காட்டி, 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்' (யோவான் 2:5) என்று நமக்கு நினைவூட்டுகிறார். நாமும் அனைவரையும் இயேசுவிடம் அழைத்துச் செல்வோம். அன்னை மரியாவைப் போல பதிலளித்து, நம் தந்தையாகிய இறைவனுக்கு மாட்சி செலுத்தி, அவருடைய மாபெரும் திட்டத்தில் பங்கேற்போம்.

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. அன்னை மரியாவின் முன்மாதிரியிலிருந்து நம் தந்தையாகிய இறைவனின் திட்டங்களைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள்?
2. நம் தந்தையாகிய இறைவனிடமிருந்து வந்த அழைப்புகளுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்கள்?

## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:

நம் சமூக வாழ்வில், அன்னை மரியாளைப் போல, இயேசுவை மற்றவர்களுக்கு எப்படி கொண்டு செல்ல முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

நமது ஆலயப் பணியில், அன்னை மரியாள் செய்தது போல், நம் தந்தையாகிய இறைவனின் திட்டத்தை மனப்பூர்வமாகவும், முழுமனத்தோடும் ஏற்கிறோமா?

### குடும்பங்கள்:

நம் குடும்ப வாழ்வில் சவாலானச் சூழ்நிலைகளை சந்திக்கும் போது, நம் சொந்த எண்ணங்களுடன் செயல்படுவதற்குப் பதிலாக அன்னை மரியாவின் முன்மாதிரியைப் பின்பற்ற என்ன நடவடிக்கை எடுக்கலாம்?

### நம் வாழ்வில் செயலாற்ற:

*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்திற்கு நீங்கள் அழைத்தவர்களை அணுகி, புத்தாண்டைப் பற்றிய உங்கள் எண்ணங்களையும், கடவுளின் தாயான மரியாளைக் கௌரவிக்கும் இந்தத் திருவிழாவின் முக்கியத்துவத்தையும் பகிருங்கள். இறைவனுக்கு மரியா சொன்ன 'ஆம்' எப்படி நம் அனைவருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது என்பதைப் பற்றி சிந்திக்கவும், வரவிருக்கும் ஆண்டில் நம்பிக்கைப் பயணத்தைத் தழுவுவதற்கு அழைத்தவர்களை ஊக்குவியுங்கள்.

### நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தாயாக மரியாவை நீர் தேர்ந்தெடுத்ததற்கு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். மேலும் உமது மீட்புத் திட்டத்திற்கான அவரது பணிவும் துணிவும் குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அவரை எங்கள் தாயாக மதிக்கும் நாங்கள், ஆழமாக நேசிக்கும் உமது திருவுளத்தையும் நாங்கள் மதிக்கிறோம். நீர் தேர்ந்தெடுத்த மக்களாக நாங்கள் வாழ அவர் எங்களுக்கு ஒரு முன்மாதிரி. அவருடைய வழிகாட்டுதல் வழியாக எங்கள் வாழ்வு உமது பெயருக்கு மாட்சி அளிப்பதாக. ஆமென்.



# ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

## தொடக்கச் செபம்:

*நமக்குச் சிந்தனை உணர்வூட்டவும் இறை வார்த்தைக்கும் பிறருக்கும் திறந்த மனதுடன் செவி சாய்க்கவும் அனைவரும் இணைந்து தொடக்கச் செபத்தை சொல்லி ஒரு தொடக்கப் பாடலைப் பாடவும்.*

**விண்ணகத் தந்தையே, திருக்காட்சிப் பெருவிழாவாகிய இன்று, ஞானியரின் வரவால் உமது மீட்புத் திட்டம் அனைவரையும் உள்ளடக்கியது என்பதை வெளிப்படுத்தினீர். இன்று நாங்கள் கேட்கும் வார்த்தை வழியாக உம்மை எதிர்கொள்ள எங்களுக்கு உதவி, எல்லா மக்களுக்கும் உமது அன்பையும் நோக்கத்தையும் வெளிப்படுத்த எங்களை ஊக்குவித்தருளும். உமது நற்செய்தி என்றும் நிலையானது, அனைவருக்கும் நன்மை தருவதாக. ஆமென்.**



## இறைவார்த்தை:

*மூன்று வாசகங்களையும் அதன் விளக்கங் களையும் ஒருவர் சத்தமாக வாசித்தப் பின், அமைதியான சிந்தனைக்கு சிறிது நேரம் ஒதுக்கவும்.*

*குழுவின் முதல்வர் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைப் பயன்படுத்தி வாசகங் களைத் தெளிவுபடுத்துவார். அமர்வுக்கு முன் குழுவின் முதல்வர் தகுந்தத் தயாரிப்புடன் இருக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.*

## முதல் வாசகம்:
### எசாயா 60:1-6

எசாயா நூலிலுள்ள இந்தத் திருப்பாடல், பாபிலோனிய நாடுகடத்தலுக்குப் பின், ஒரு நபரின் பார்வையில் எழுதப்பட்டது. இஸ்ரயேலர்கள் தங்கள் தாயகத்திற்குத் திரும்ப முடியும் என்றாலும், அவர்கள் முன்பு இருந்த வலிமையான நாடாக அது இல்லை. ஆண்டவர் அந்நிய நாடுகளின் மீது பிரகாசித்து, கடவுளுடைய மக்களுக்கு செல்வங்களைக் கொன்று வரத் தூண்டு வார் என்று இஸ்ரயேலர்களுக்குத் திருப்

பாடல் கூறுகிறது, இயேசு தனது காலத்தில் பிற இனத்தாருக்கு நம்பிக்கையை அளிப்பர் என்ற யோசனைக்கு இது ஒரு முன்னோடியாகும்.

## இரண்டாம் வாசகம்:
## எபேசியர் 3:2-3, 5-6

எபேசியர்களுக்கு எழுதப்பட்டத் திருமுகத்தில் புனித பவுல் பிற இனத்தாருக்கும் யூதர் களுக்கும் இடையிலான புதிய ஒற்றுமையைப் பற்றிப் போதிக்கிறார். இந்த வசனங்கள் 'உடன் உரிமையாளர்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி அந்தக் கருத்தை மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார். நமது தந்தை வாக்களித்த விடுதலைக்கு (நிலைவாழ்வுக்கு) யூதர்களைப் போலவே பிற இனத்தாருக்கும் உரிமை உண்டு என்பதை இது காட்டுகிறது. அதே போல், நம்மைச் சுற்றியுள்ள ஒரே நம்பிக்கை இல்லாதவர்களை ஒதுக்கித் தள்ளாமலிருக்க நாம் அழைக்கப்படுகிறோம். தந்தை தனது அன்பை உலகில் உள்ள அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறார்..

## நற்செய்தி வாசகம்:
## மத்தேயு 2:1-12

ஞானிகளின் வருகை முதல் வாசகத்தில் முன்நிழலாக உள்ளது. ஏனெனில் இரு பகுதிகளிலும் இதே போன்ற பொன்னும், நறுமணப்பொருளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இயேசுவின் பிறப்பு கொண்டு வரும் மாற்றத்தை இந்த இணை காட்டுகிறது. இது கடவுளுடைய மக்களை பலப்படுத்துவதற்கான ஒரு ஆரம்பம். இருப்பினும், அவர் இனி இஸ்ரயேல் மக்களை மட்டும் தம்முடையவர்களாகக் காணப் போவதில்லை. இப்போது அவர் எல்லா இனத்தாரிலிருந்தும் நாடுகளிலிருந்தும் புதிய நம்பிக்கையாளர்களை உள்ளடக்குகிறார். இது இரண்டாம் வாசகத்தில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அங்கு, புனித பவுல் யூதர்களை, கிறிஸ்தவர்கள் என்ற புதிய அடையாளத்தை ஏற்றுக்கொள்ள பிற இனத்தாருடன் ஒன்றுபட ஊக்குவிக்கிறார்..

## சிந்தனைகள்:

*இந்த வார வாசகங்களின் சிந்தனையை ஆழப்படுத்த உதவும் இப்பகுதியை ஒருவர் சத்தமாக வாசிக்கவும். சிந்தித்துப் பதிலளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

இயேசுவைக் காண வந்த ஞானிகள் யூதர்கள் அல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். அவர்கள் கிழக்கிலிருந்து இயேசுவுக்கு வணக்கம் செலுத்த வந்தார்கள், ஒரு மீட்பராக அல்ல, ஒரு அரசராக. ஆனாலும், தந்தை அவர்களை விண்மீன் வழிய இயேசுவிடம் வழிநடத்திச் சென்றார். நமது அரசர் நம்பிக்கை உள்ளவர்கள், அவரை அறியாதவர்கள் என்று பாகுபாடு காட்டுவதில்லை.

இயேசு கிறிஸ்துவை உலகம் முழுவதற்கும் வெளிப்படுத்தும் பணி இப்போது நம் மீது உள்ளது. கத்தோலிக்கத் திரு அவை தன் இயல்பிலேயே மறைபரப்புகிறது. திரு அவையின் உறுப்பினர்களாகிய நாம், நம் தனித்துவமான வழிகளில் மறைபரப்புச் சீடர்களாக இருக்க வேண்டும். நம் செயல்கள் நம் தந்தையாகிய இறைவனை நம்மில் செயலாற்றுவதைக் காட்ட வேண்டும். கடினமான சக ஊழியர்களையோ, குடும்ப

உறுப்பினர்களையோ எதிர்கொள்ளும் போது நாம் பொறுமையாக இருக்கிறோமா? தேவைப்படுவோருக்கு இரக்கச் செயல்களைச் செய்கிறோமா? அன்பு காட்டுவதில் ஒருவரையொருவர் மிஞ்சுங்கள் (உரோமர் 12:10). நம் வாழ்வில், நம் தந்தையாகிய இறைவனை அறியாதவர்களை நாம் சந்திப்போம். நமது செயல்கள் கிறிஸ்துவை அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இறுதியாக, புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் சொல்வது போல், நம்மிடையே உள்ள நம்பிக்கை இல்லாதவர்களும் இறை ஆட்சியில் ‘உடன் உரிமையாளர்கள்’ என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவருடைய மாற்றம் மிகு அன்புக்கு அவர்கள் இந்தக் குறைந்தத் தகுதியும் உடையவர்கள் அல்ல. அப்படியானால், பெரியோரோ சிறியயோரோ, யாராக இருந்தாலும் அனைவருக்கும் அவருடைய அன்பை அறிய உதவுவதோடு, நம் தந்தையாகிய கடவுளின் பிள்ளைகள் என்ற அடையாளத்தைத் தழுவ அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும்..

## பகிர்வுக்கானக் கேள்விகள்:

*இப்பகுதி தனிநபர் மற்றும் குழுக்கள் பகிர்வுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பிற்பகுதி அன்பியங்கள், ஆலயப் பணிக்குழுக்கள், குடும்பங்கள் என்றக் குறிப்பிட்டச் சூழலுக்கு ஏற்பக் குழுப் பகிர்வுகளைத் தூண்ட உதவும். அனைவரும் இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பதில் அளிக்கத் தகுந்த நேரத்தை அனுமதிக்கவும்.*

## தனிநபர் சிந்தனை & பகிர்வுக்கானக் கேள்விகள்:

*கீழுள்ளவற்றைச் சிந்திக்க நேரம் ஒதுக்கவும். நீங்கள் குழுவிலிருந்தால் குழுவாகப் பகிரவும். உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

1. உங்கள் முந்தைய கிறிஸ்து பிறப்பு விழாக் கொண்டாட்டங்களில், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் அவருடைய மீட்புக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல என்பதை நீங்கள் எப்படிக் காட்டியிருக்கிறீர்கள்?
2. நீங்கள் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடும் விதத்தை எப்படி மாற்றி, மீட்பு அனைவருக்கும் என்ற செய்தியைக் கொண்டு செல்ல விரும்புகிறீர்கள்??



## குழுச் சூழலுக்கு ஏற்றப் பகிர்வுக்கானக் கேள்விகள்:

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் கேள்விகளில் ஒன்றை நீங்கள் சிந்திக்கவும். இன்று உங்கள் மனதைத் தொட்ட இறைவார்த்தைப் பகுதியைப் பற்றிப் பகிருங்கள். மற்றவர்களுடன் நாம் எவ்வாறு இறைவார்த்தையைப் பகிரலாம்?*

### அன்பியங்கள்:

ஒரு சிறிய கிறிஸ்தவ சமூகமான நாம், கிறிஸ்துவை இன்னும் அறியாதவர்களுக்கு கிறிஸ்துவின் அன்பை நாம் எவ்வாறு கொண்டு செல்ல முடியும்?

### ஆலயப் பணிக்குழுக்கள்:

நம்பிக்கையாளர்களுக்கும், நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் நாம் எந்தெந்த வழிகளில் அவருடைய மீட்பின் தூதர்களாக நாம் இருக்க முடியும்?

### குடும்பங்கள்:

நம் அண்டை வீட்டாருக்கு நம் குடும்பத்தார் எவ்வாறு கிறிஸ்துவின் அன்பின் சாட்சியாக இருக்க முடியும்??

### நம் வாழ்வில் செயலாற்ற:

*நீங்கள் குழுவாகவோ தனி நபராகவோ ஒருவரைச் சென்றடைந்து இயேசுவின் நற்செய்தியைப் பகிர்வதற்கான உங்களது செயல்.*

உங்கள் சமூகத்தார், ஆலயப் பணிக்குழுவினர், குடும்பத்தார் அனைவருடன் மீண்டும் ஒன்று கூடி, இந்தக் கிறிஸ்து பிறப்பு விழாவில் கடவுள் உங்களுக்கு வெளிப்படுத்திய ஒரு செய்தியை அனைவருடன் பகிருங்கள்.இயேசுவைச் சந்திக்கச் சென்ற ஞானிகளைப் போல, இத்திருவருகைக்காலத்தில் நீங்கள் செய்த பயணத்தைப் பற்றி சிந்தியுங்கள். கிறிஸ்துவை வரவேற்கும் அனுபவம் உங்கள் வாழ்வை எவ்வாறு தொட்டது என்றும், புத்தாண்டுக்குள் அதை எவ்வாறு கொண்டு செல்லலாம் என்றும் சிந்தியுங்கள்.

### நிறைவு செபம்:

*நிறைவு செபத்தை அனைவரும் இணைந்து சொல்லி அமர்வை முடிக்கவும். பங்கேற்ற அனைவருக்காகவும் சமூகத்திற்காகவும் செபியுங்கள்.*

விண்ணகத் தந்தையே, உமது ஞானத்துடனும் புரிதலுடனும் ஞானிகள் இயேசுவை அரசராகவும், ஆண்டவராகவும் அங்கீகரித்தனர். உமது வார்த்தையால் எங்கள் காதுகளும், உமது அன்பினால் எங்கள் இதயங்களும் திறக்க அருள் புரியும். நாங்கள் எதிர்கொள்ளும் எல்லாவற்றிலும் உம்மைக் காண எங்கள் கண்களைத் திறந்தருளும். உமது மீட்பின் செய்தியை உலகம் முழுவதும் பரப்புவது எங்கள் பொறுப்பு, இந்த ஆணைக்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.

# பிற்சேர்க்கை

## திருவருகை, கிறிஸ்து பிறப்புக் கால நடவடிக்கைகள்

திருவருகைக்காலத்தில் இயேசுவின் வருகை வலியுறுத்தப்படுகிறது:

- **கடந்த காலத்தில் அவரது வருகை** – பெத்லகேமில் – முதல் கிறிஸ்துமஸ்.
- **நிகழ்காலத்தில் அவரது வருகை** – நாம் பங்கேற்கும் திருப்பலியிலும், அருள் அடையாளங்களிலும், நமது தினசரி செபங்களிலும், பணி இடங்களிலும் கிடைக்கும் அருளாலும் அவரது வருகையை நாம் உணரலாம். நமக்குள்ள அவரது திருவுளத்தின் கருவிகளான நம் அண்டை வீட்டார் வழியாகவும், நம் தந்தையாகிய இறைவனின் வாழ்வை வாழும் நாம் போதும், தினமும் நாம் எதிர்கொள்ளும் மக்களுக்குக் கிறிஸ்துவை வழங்கும் போதும், அவர் நம் வழியாகப் மற்றவர்களுக்கும் வருகிறார்.
- **எதிர்காலத்தில் அவரது வருகை** – பரோசியா – இறுதித் தீர்வை நாள்.

ஒரு குடும்பமாகவோ, ஒரு சமூகமாகவோ, ஆலயப் பணிக்குழுவாகவோ நம் தந்தையாகிய இறைவனின் அற்புதக் கொடையாகிய இயேசுவைப் பெறுவதற்கு நாம் எவ்வாறு தயாராகலாம் என்று சிந்தியுங்கள். இந்தக் கொடையைப் பெறவும், தந்தை நம் மீது வைத்திருக்கும் இந்த அன்பின் ஆழத்தைக் கண்டறியவும், நம் தினசரி வாழ்வில் நம் தந்தையின் வார்த்தையை வாழவும், அதைப் பிறரோடு பகிரவும் நாம் தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.



## ஒரு குடும்பமாகவோ, சமூகமாகவோ, ஆலயப் பணிக்குழுவாகவோ நீங்கள் செய்யக் கூடிய சில பரிந்துரைகள்:




**தியானத்திற்காக நீங்கள் ஒன்றாகக் கூடி வர ஒரு நாளைத் தேர்வு செய்யுங்கள்** (நிகழ்நிலையாகவும் இதைச் செய்யலாம்). இந்நாளை செபத்திலும், சிந்தனையிலும், பகிர்விலும் செலவிட நீங்கள் உங்கள் வேலைகளையும், கடைத்தொகுதியை வலம் வருவதையும், மற்ற நடவடிக்கைகளையும் ஒதுக்கி விடுங்கள். பின்வரும் இணைய தளங்களையும் பயன்படுத்தலாம்.

- *http://www.ignatianspirituality.com/advent*
- *http://onlineministries.creighton.edu/CollaborativeMinistry/Advent/*

---



**திருவருகைக்கால நோன்பு இருக்க (ஒருசந்தி) முடிவெடுங்கள்.** அதிகம் பேசுவதைத் தவிர்த்து செவிகொடுப்பதில் கவனம் செலுத்துங்கள். முதலில், நமது தினசரி செப நேரத்திலும், விவிலிய வாசிப்பிலும், சிந்தனையிலும் நம் தந்தையாகிய இறைவனுக்குச் செவிகொடுக்கக் கற்றுக் கொள்ளுங்கள். பின், உங்களது குடும்பத்தார், சுற்றி உள்ள சமூகத்தார், சக ஊழியர்கள், அண்டை வீட்டார் ஆகியோருக்குச் செவிகொடுக்க முயலுங்கள். அவர்களது தேவைகளை அறிந்து, அவற்றை செபம் வழியாக நம் தந்தையாகிய இறைவனிடம் சமர்ப்பித்து, மன்றாடி, அவற்றை நிறைவேற்ற முயற்சி எடுங்கள்.

---



**நீங்கள் பிறருக்கு எவ்வாறு ஒரு கொடையாக இருக்க முடியும் என்பதைப் பற்றியும் சிந்தியுங்கள்.** உங்கள் அருகிலுள்ள வறியோரை, நோயுற்றோரை, தனித்திருக்கும் முதியோரை, வெளிநாட்டுப் பணியாளர்களை சந்தித்துப் பேச முயற்சி எடுங்கள். நீங்கள் உங்களது அன்பியங்களோடும் ஆலயப் பணிக்குழுவோடும் இணைந்தும் இதைச் செய்யலாம். நாம் மகிழ்ச்சியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது அது மனதார அனுபவிக்கப்படுகிறது. நீங்கள் பிறரைச் சென்றடைய இத்திருவருகைக்காலத்தைப் பயன்படுத்துங்கள். நீங்கள் எதிர் கொள்ளும் அனைவரிடமும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கவும், அவருக்கு சாட்சியாக இருக்கவும் மறவாதீர்கள்.

# திருவருகைக்கால மலர்வளையத்துடன் செபித்தல்

திருவருகைக்கால மலர்வளைய அடையாளம், ஒளிக்கும் இருளுக்கும் இடையிலான பதற்றத்திலும், உலகின் ஒளி மெசியாவின் வருகைக்குக் காத்திருப்பதிலும் அடங்கியுள்ளது. வாராவாரம் மெழுகுதிரிகளை ஏற்றி வைப்பது, நமது ஆண்டவர் உலகிற்கு வந்த முதல் வருகையையும் வாழ்வோரையும் இறந்தோரையும் இறுதித் தீர்ப்பிட அவரது இரண்டாம் வருகையின் எதிர்பார்ப்பையும் எதிர்நோக்கையும் குறிக்கிறது. ஒவ்வொரு வாரமும் மெழுகுதிரி ஏற்றப்படுவதால் ஒளி அதிகரித்து இருள் குறைகிறது. உலகின் ஒளியாம் இயேசு கிறிஸ்து இருளை வென்றார் என்பதை இது நமக்கு நினைவுபடுத்துகிறது.

*(4 weeks of Advent wreath prayers are adapted from Catholic Household Blessings and Prayer (NCCB, 1988))*



## திருவருகை முதல் வாரம்

**முத :** தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே...
**எல் :** ஆமென்.
**முத :** ஆண்டவரின் பெயராலே நமக்கு உதவி உண்டு...
**எல் :** விண்ணையும் மண்ணையும் படைத்தவர் அவரே.

**இறைவார்த்தை: எசாயா 9 : 1 – 2**

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடி இருப்போர் மேல் சுடர் ஒளி உதித்து உள்ளது. ஆண்டவரே! அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தீர். அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப் படுத்தினீர். அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள். கொள்ளைப் பொருளைப் பங்கிடும் போது அக்களிப்பது போல் களிகூர்கிறார்கள்.

**முத :** ஆண்டவரின் அருள்வாக்கு.
**எல் :** இறைவனுக்கு நன்றி.

சிறிது நேர அமைதிக்குப் பின், அனைவரும் பரிந்துரை செபங்களையும், கர்த்தர் கற்றுக் கொடுத்த செபத்தையும் சொல்லவும். அதன் பின்:

**முத :** இந்தத் திருவருகைக்கால மலர் வளையத்தை புனிதப்படுத்தும்படி இப்போது நாம் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

அனைவரும் தங்கள் வலது கைகளை திருவருகைக்கால மலர்வளைத்தை நோக்கி நீட்ட, முதல்வர் கீழுள்ள செபத்தைச் சொல்லவும்:

**முத :** எங்கள் ஆண்டவராகிய இறைவா, உம் திருமகன் இயேசு கிறிஸ்துவுக்காக நாங்கள் உம்மைப் போற்றிப் புகழ்கிறோம். எங்கள் இம்மானுவேல் அவரே, மக்களின் எதிர்நோக்கும் அவரே, எங்களைக் கற்பித்து வழிநடத்தும் ஞானமும் அவரே, ஒவ்வொரு நாட்டின் மீட்பரும் அவரே. ஆண்டவரே, இந்தத் திருவருகைக்கால மலர்வளையத்தின் மெழுகுதிரிகளை நாங்கள் ஏற்றும் போது, உமது ஆசீரை எங்கள் மீது பொழிந்தருளும். இந்த மலர்வளையமும் அதிலுள்ள ஒளியும் எங்களுக்கு மீட்பைக் கொண்டு வரும் கிறிஸ்துவின் வாக்குறுதியின் அடையாளமாக இருப்பதாக. இறைவா, தாமதியாதேயும், சீக்கிரம் வாரும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவின் பெயரால் உம்மை மன்றாடுகிறோம்.
**எல் :** ஆமென்.

முதல் ஊதா நிற மெழுகுதிரியை ஏற்றவும்:

**முத :** நாம் அனைவரும் இறைவனை போற்றுவோம்.
**எல் :** இறைவனுக்கு நன்றி.

கீழுள்ளப் பாடலைப் பாடி நிறைவு செய்யவும்:

மாரனாதா! மாரனாதா! எம் ஆண்டவரே வருக!
மண்ணகத்தோரை மீட்க மனுவேலா வருக!

அகவிருளை அகற்றும் எழில் ஒளியே வருக!
இனிய விடிவெள்ளியே... எழுந்தருளி வருக!

புனித ஈசாயின் வேரில் பூத்த தாவீதின் மைந்தா!
புதுமை நிறை வாழ்வினை... பொழிந்தருள வருக!

## திருவருகை இரண்டாம் வாரம்

முதலாம், இரண்டாம் ஊதா நிற மெழுகுதிரிகளை ஏற்றவும்:

**முத :** ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசு கிறில்துவின் வருகைக்காக வும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

**முத :** ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
**எல் :** தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

**முத :** நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.



## திருவருகை மூன்றாம் வாரம்

முதல் இரு ஊதா நிற மெழுகுதிரிகளையும், இளஞ்சிவப்பு மெழுகுதிரியையும் ஏற்றவும்:

**முத :** ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக வும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

**முத :** ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
**எல் :** தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

**முத :** நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

## திருவருகை நான்காம் வாரம்

மூன்று ஊதா நிற மெழுகுதிரிகளையும், இளஞ்சிவப்பு மெழுகுதிரியையும் ஏற்றவும்:

**முத :** ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, நீர் வாழ்த்தப் பெறுவீராக. இருளிலும் ஒளியிலும் இருக்கும் நீர் வாழ்த்தப் பெறுவீராக. ஏனெனில் நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் எம் மீட்பரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக வும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

**முத :** ஆண்டவராகிய இயேசுவே வாரும்!
**எல் :** தாமதியாதேயும். சீக்கிரம் வாரும்!

**முத :** நாம் இவ்வுலகில் நிதானத்தோடும், நீதியோடும், இறைப்பற்றோடும் வாழ்வோமாக. ஏனெனில் நாம் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும் நம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.
**எல் :** ஏனெனில், ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

## கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

**முதல்வர் :** கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு நாம் கூடியுள்ளோம் (அல்லது: இன்று, நாம் இயேசுவின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்). அவருடைய வருகைக்காக நாம் நீண்டக் காலம் தயாராகி வருகிறோம். அவருடைய வருகையை முன்னறிவித்த இறைவாக்கினர்களின் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்போம்.

**வாசகர் 1 :** காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது.

**வாசகர் 2:** ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ ‘வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்’ என்று அழைக்கப்படும்.

**வாசகர் :** யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார்.

**முத :** வாசிக்கப்பட்ட இந்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேறியதை இன்று நாம் கொண்டாடுகிறோம். ‘இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்’ என்று விவிலியம் கூறுகிறது. எனவே, திருவருகைக்கால மலர்வளையத்தின் அனைத்து மெழுகுதிரிகளையும் இப்போது நாம் ஏற்றுவோம்.

**முத :** முதலில், நாம் எதிர்நோக்கின் மெழுகுதிரியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் எதிர்நோக்கு. (முதல் ஊதா நிற மெழுகுதிரியை ஏற்றவும்)

**முத :** அடுத்து நாம் அமைதியின் மெழுகுதிரியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நம் எதிர்நோக்கும் அமைதியுமாவார். (இரண்டாம் ஊதா நிற மெழுகுதிரியை ஏற்றவும்)

**முத :** மூன்றாவதாக, நாம் மகிழ்ச்சியின் மெழுகுதிரியை ஏற்றுவோம். ஏனெனில், இயேசுவே நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறார். (இளஞ்சிவப்பு நிற மெழுகுதிரியை ஏற்றவும்)

**முத :** நான்காவதாக, இயேசு நமக்கு அன்புமயமானவராக இருப்பதால் அன்பைப் பிரதிபலிக்கும் மெழுகுதிரியை நாம் ஏற்றி வைப்போம். (மூன்றாம் ஊதா நிற மெழுகுதிரியை ஏற்றவும்)

**முத :** இறுதியாக நாம், நடுவிலுள்ள மெழுகுதிரியை ஏற்றுவோம். இது கிறிஸ்துவைக் குறிக்கும் மெழுகுதிரி. இயேசு நமக்காகப் பிறந்தார் என்பதைக் கொண்டாட இதை ஏற்றுவோம். அவர் என்றென்றும் நம் வாழ்வில், நம் மத்தியில், நம்மோடு இருக்கிறார். (வெண்ணிற மெழுகுதிரியை ஏற்றவும்)

**முத :** அன்புத் தந்தையே, உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்து என்னும் உன்னதமானக் கொடைக்காக உமக்கு நன்றி. அன்பானவரே, அனைவருக்கும் தந்தையே, இவ்வுலகை மூடிய இருள், உமது வார்த்தையின் பிரகாசமான விடியலுக்கு வழிவகுத்தது. எங்களை இந்த ஒளியின் மக்களாக மாற்றியருளும். காத்திருக்கும் இவ்வுலகிற்கு உமது வாழ்வைக் கொண்டு செல்ல உம் வார்த்தைக்கு எங்களை உண்மையுள்ளவர்களாக மாற்றியருளும். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**எல் :** ஆமென்.

# திருவருகைக்கால 'ஓ' முன்மொழிப் பாடல்கள்

பாரம்பரியமாக, கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு முன் உள்ள ஏழு நாள்களின் இரவுச் செபத்தின் போது (Vespers) பாடப்படும் சிறு பாடல்களை 'ஓ முன்மொழிப் பாடல்கள்' எனக் கூறுவர். பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளபடி, வரவிருக்கும் மெசியாவின் பண்புகளைப் பாடலாகப் பாடி, வரவிருக்கும் கிறிஸ்து, பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல, இக்கால மக்களுக்கும் அவர் விடுதலை அளிக்க வல்லவர் என்பதை எடுத்துரைக்கும் அற்புதமான இறையியல் இப்பாடல்களில் அடங்கியுள்ளது. எசாயாவின் இறைவாக்கின்படி இயேசுவைத் தனிப்பட்டப் பண்புடன் அழைக்கும் 'ஓ' எனத் தொடங்கும் இப்பாடல்களை நாம் மாலைப் பொழுதில் பாட வேண்டும்.

டிசம்பர் 17: ஓ சாபியென்சியா (ஓ ஞானமே) எசாயா 11:2-3
டிசம்பர் 18: ஓ அடோனாய் (ஓ ஆண்டவரே) எசாயா 11:4-5
டிசம்பர் 19: ஓ ரேடிக்ஸ் ஜெஸ்சே (ஓ ஈசாயின் அடிமரத் தளிரே) எசாயா 11:1
டிசம்பர் 20: ஓ கிளாவிஸ் டேவிட் (ஓ தாவீதின் திறவுகோலே) எசாயா 22:22
டிசம்பர் 21: ஓ ஓரியென்ஸ் (ஓ விடிவெள்ளியே) எசாயா 9:2
டிசம்பர் 22: ஓ ரெக்ஸ் ஜென்டியம் (ஓ அனைத்துலக அரசரே) எசாயா 9:7
டிசம்பர் 23: ஓ இம்மானுவேல் (ஓ நம்மோடு கடவுளே) எசாயா 7:14

இப்பாடல்களைப் பாட வழக்கமான முறையில் ஆன்மீக அலுவல்களுடன் மாலையில் தொடங்க வேண்டும்:

1. முதலில் 'ஓ முன்மொழிப் பாடல்கள்',
2. பின்னர் 'என் ஆன்மா ஆண்டவரை' என்ற செபம்,
3. மீண்டும் 'ஓ முன்மொழிப் பாடல்கள்' பாடி முடிக்க வேண்டும்.

## டிசம்பர் 17



ஓ ஞானமே! உன்னதமான இறைவனின் படைப்புகள்
அனைத்தையும் உமது ஆற்றலாலும் அன்பாலும் வழிநடத்துபவரே!
ஞானத்தின் பாதையை எங்களுக்குக் கற்பிக்க வாரும்!

## டிசம்பர் 18



ஓ இஸ்ரயேல் வீட்டாரின் தலைவரே! சீனாய் மலை மீது
மோசேவுக்குக் கட்டளைகளைக் கொடுத்தவரே!
உமது வல்லமையினால் எங்களை விடுவிக்க வாரும்!

## டிசம்பர் 19



ஓ ஈசாயின் அடிமரத் தளிரே! உமது மக்கள் அனைவருக்கும்
கடவுளின் அன்பின் அடையாளமாகத் திகழ்பவரே! எவ்விதத்
தாமதமும் இன்றி எங்களைக் காப்பாற்ற வாரும்!

## டிசம்பர் 20



ஓ தாவீது அரசரின் திறவுகோலே!
இறை அரசின் வாயில்களைத் திறப்பவரே!
இருளின் ஆதிக்கத்தில் உள்ளோரை விடுவிக்க வாரும்!

## டிசம்பர் 21



ஓ விடி வெள்ளியே! நிலையில்லாப் பேரின்ப ஒளியே!
நீதியின் கதிரவனே! இருளில் வாழ்வோர் மீதும், இறப்பின்
நிழலில் உள்ளோர் மீதும் பிரகாசிக்க வாரும்!

## டிசம்பர் 22



ஓ அனைத்துலக அரசரே!
திரு அவையின் மூலைக்கல்லே!
நீர் மண்ணிலிருந்து உருவாக்கிய மனிதனை மீட்க வாரும்!

## டிசம்பர் 23



ஓ இம்மானுவேலனே! எங்கள் அரசரே!
கட்டளைகளைக் கொடுத்தவரே! எங்கள் ஆண்டவராகிய
இறைவனே! எங்களை மீட்க வாரும்!

# நாங்கள் எதை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்?

இக்கையேட்டைப் பயன்படுத்தியமைக்கு நன்றி!
நீங்களும் உங்கள் சமூகமும் இறை நம்பிக்கையில் வளர
இச்சிந்தனைகள் உதவியிருக்கும் என நம்புகிறோம்.
இக்கையேடு உங்கள் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி
செய்ததா? எதிர்காலக் கையேடுகளில் வேறு என்னென்ன
எதிர்பார்கிறீர்கள்? உங்கள் கருத்து எங்களுக்கு
முக்கியமானது. அதை எங்களுக்குத் தெரிவியுங்கள்!

# நன்றியறிவிப்புகள்


**ஆசிரியர் குழு:**
ஆக்னெஸ் ஙௌ
ஆர்தர் கோ
ஆன்ட்ரு கிஃப்லி
சாரா வீ
செரில் சிம்
டெஃப்னி லியோங்
டெஸ்மண்ட் சூன்
வெனஸ்சா சான்
ஜாக்குலின் ஃப்ளெட்சர்
ஜெர்விஸ் காங்
அருட்தந்தை ரெஜினால்ட் மரி
அருட்தந்தை ஜெரார்ட் லூயிஸ்

**மொழிபெயர்ப்பு:**
சீன மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACAMS)
தமிழ் மொழி பேசுவோருக்கான உயர்மறைமாவட்ட ஆணையம் (ACTS)

**வடிவமைப்பு:**
ஜெஸ்லின் சியா

2 Highland Road #02-19 S(549102)

6911 0420

one.org.sg

enquiries.one@catholic.org.sg

@officeforthenewevangelisation

Office for the New Evangelisation

@evangelise.sg

OFFICE FOR THE NEW EVANGELISATION